# மகுடம்

இதழ் - 01



## யா/சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலை

## அதிபர் அறிக்கை - 2015

கற்றாங்கொழுகு

# யா/ சுன்னாகம் றோ. க. த. க. பாடசாலை
# ஒளிவிழாவும் பரிசளிப்பு விழாவும்
# மகுடம் வெளியீடும் - 2015

**காலம் : 05-12-2015 சனிக்கிழமை**

**நேரம் : பிற்பகல் 1.00 மணி**

**இடம் : ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான மண்டபம்**

**தலைவர் : திருமதி யா. சதீஸ்குமார்** *(அதிபர்)*

ஆசியுரைகள் :

**வணபிதா. ம. றெக்ஸ் சவுந்தரா அடிகளார்**

*(பங்குத்தந்தை சென். அன்ரனிஸ், சுன்னாகம்)*

முத்தமிழ் குருமணி, சகலாகம சாங்கிரகர்

**சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்**

*(பிரதமகுரு, ஸ்ரீ கதிரமலைச்சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்)*

பிரதம விருந்தினர் :

**கௌரவ உயர்திரு. பா. கஜதீபன்**

*(வடக்கு மாகாணசபை உறுப்பினர்)*

சிறப்பு விருந்தினர்கள் :

**திரு. சு. சண்முககுலகுமாரன்**

*(கோட்டக்கல்வி அலுவலர், உடுவில்)*

**திரு. அ. ஜெயக்குமாரன்**

*(சுகாதார வைத்திய அதிகாரி, உடுவில், யாழ். பிராந்திய வைத்திய அதிகாரி, மலேரியா தடைப்பிரிவு)*

நினைவுப்பேருரை

**திருமதி ம. மத்தியூஸ்**

*(பழைய மாணவி, முன்னாள் ஆசிரியை)*

வெளியீட்டுரை

**திரு. த. மோகன்ராஜ்**

*(உபஅதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)*

மதிப்பீட்டுரை

**திரு. ம. பா. மகாலிங்கசிவம்**

*(விரிவுரையாளர், யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)*

# யா/ சுன்னாகம் றோ. க. த. க. பாடசாலை

**மகுட வாசகம்**

"கற்றாங்கொழுகு"

**தூரநோக்கு :**

புதிய அறிவியத்தை உற்பத்தி செய்யும் மாணவர் சமூகத்தை உருவாக்குவோம்.

**பணிக்கூற்று :**

தரமான கல்வியின் ஊடாக மாற்றமுறும் உலகினை வெற்றி கொள்ளும் மிருதுநிலைச் சமூகத்தை கட்டியெழுப்புவோம்.

# மகுடம் சூடுவோம்

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வெளியிடப்படும் "மகுடம்" சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

"வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகிறான்" என்பது நாம் அறிந்த ஒன்று. எவ்வளவு பெரிய பெரிய பட்டங்களைப் பெற்றாலும் வாசிப்பதால் அடைந்துகொள்கின்ற நன்மைகளுக்கு அவை ஈடாகா. காரணம், பட்டப் படிப்புக்கள் எப்போதும் ஒரு துறை சார்ந்த அறிவையே தர முடியும்.

ஆனால், வாசிப்பு என்பது பரந்த, விரிந்த அறிவைத் தர வல்லது. மட்டுமல்லாமல், ஆரோக்கியமான உடல், உள வளர்ச்சிக்கும் அது ஏதுவாகவுள்ளது. இவ்வாறு உடல், உள, அறிவு வளர்ச்சி ஏற்படும்போது, அதுவே மனிதனைப் பூரணமாக்குகின்றது. வாசிப்பதால் ஒரு மனிதன் அடையும் நன்மைகள் பல.

**அறிவு வளர்ச்சி:**

ஒரு புத்தகத்தை வாசிக்கும்போது, அது ஒரு துறைசார்ந்த விரிவான அறிவைக் கொடுக்கும். அதேபோல, பல்துறை சார்ந்த விடயங்களைத் தாங்கி வரும் ஒரு சஞ்சிகையை வாசிப்பவருக்குப் பல்துறை சார்ந்த அறிவை அது கொடுக்கும். நாளாந்தம் வெளிவரும் ஒரு புதினப் பத்திரிகை, நாட்டு நடப்பு, அரசியல், சமூகக் கட்டுரைகள், சிறுகதைகள், விளையாட்டுக்கள், இலக்கியங்கள், மருத்துவம் போன்றவற்றின் அறிவைக் கொடுக்கின்றது. இவ்வாறு வாசிப்பு ஒரு மனிதனுக்குப் பல்துறை சார்ந்த அறிவைக் கொடுக்கின்றபோது, அவன், எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் எந்தவொரு விடயத்தையும்பற்றிப் பேசவும் எழுதவும் ஆற்றல் பெறுகின்றான்.

**மூளை வளர்ச்சி:**

கத்தி வெட்ட, வெட்டக் கூர்மையாவதுபோல, வாசிப்பும் மூளையைக் கூர்மையாக்கும். வாசிப்பு மூளையைச் சுறுசுறுப்பாக வைத்திருப்பதனால், மூளை உறுதியானதாகவும் ஆரோக்கியமானதாகம் வளரும். அத்தோடு, நாளாந்த வாசிப்பு, மன அழுத்தத்திலிருந்து மனிதனை விடுவிக்க வல்லது.

**வார்த்தை வங்கி:**

நாளாந்த வாசிப்பு, ஒரு மனிதனுடைய வார்த்தை வங்கியை அதிகரிக்கின்றது. வார்த்தைகளின் அதிகரிப்பு ஒருவரை பேச்சாற்றல், எழுத்தாற்றல் உள்ள மனிதனாக மாற்ற முடியும். கவிதை ஆக்கத்திற்கு வார்த்தை வங்கி இன்றியமையாததாகும்.

**ஆராய்ச்சித் திறன்:**

வாசிப்பு, ஒரு மனிதனின் ஆராய்ச்சித் திறனை வளக்க உதவும். ஒரு மனிதன், தான் அறிந்து கொள்ளும் ஒரு கருத்தை அப்படியே ஏற்றுக்கொள்வதை விடுத்து, அதைப் பல கோணங்களில் சிந்தித்து, விமரிசித்து, ஆராய்ந்து, புதிய சிந்தனைகளையும் கருத்துக்களையும் உருவாக்கிக்கொள்ளவும் புதிய கண்டு பிடிப்புக்களை மேற்கொள்ளவும் முடியும்.

**பயனுள்ள பொழுதுபோக்கு:**

ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாகக் ஆக்கிக்கொள்ள, வாசிப்பு ஒரு சிறந்த வழியாகும். வாசிப்பு மனிதனின் உள்ளத்தில் அமைதியையும் நல்ல இளைப்பாற்றியையும் கொடுக்க வல்லது. முக்கியமாக, ஆன்மீக வாசிப்புக்கள் ஒரு மனிதனைப் பக்குவப் படுத்த முடியும்.

மேலும், வாசிப்பு மனிதனுடைய படைப்பாற்றலையும் கற்பனா சக்தியையும் வளர்க்க வல்லது. மனிதனின் அன்றாட உணவைப் போன்று, வாசிப்பும் அவனது அன்றாட வாழ்வின்

நிகழ்ச்சி நிரலாக இடம்பெற வேண்டும். வாழ்வின் சோர்வுகள், தளர்வுகளில் அது புத்தூக்கத்தை அளிக்க வல்லது. ஆக்க பூர்வமான சிந்தனைகளுக்கு விருந்து படைப்பது வாசிப்புப் பழக்கமே.

ஆயினும், வாசிப்புப் புத்தகங்களைத் தெரிவு செய்வதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். வாசித்துப் பயனடையக்கூடிய நல்ல புத்தகங்களும் உண்டு, அதேபோல வாழ்வைச் சீரழிக்கக்கூடிய கெட்ட புத்தகங்களும் உண்டு. நல்ல புத்தகங்கள் மனித மனதை உயரிய சிந்தனைகளால் நிரப்ப வல்லனளூ மனித அறிவை விரிவாக்கவும், ஆழமாக்கவும் கூடியனளூ உள்ளத்தைத் தூய்மையாக்கக் கூடியன. இத்தகைய புத்தகங்களை மனிதன் தேடிப் பெற்று அவற்றின் மூலம் கிடைக்கின்ற அதிகபட்ச நன்மைகளையும் இன்பத்தையும் அடைந்துகொள்ள முன் வர வேண்டும்.

இவ்வாறு எத்தனையோ நன்மைகளை வாசிப்பு மனிதனில் ஏற்படுத்துகின்றபோதிலும், இன்று, வாசிப்புப் பழக்கம் அருகிச் செல்வது மிகவும் வேதனைக்குரியது. அதனால், இன்று நாம் பெரும்பாலும் காண்பது, பூரண வளர்ச்சி இல்லாத மனிதர்கள், அவர்களைக் கொண்டிருக்கின்ற நொண்டிப்போன சமுதாய அமைப்புக்கள், நோய்வாய்ப்பட்ட சிந்தனைகள், தேய்ந்து போகும் மனித நேயங்கள், ஆழமில்லாத செயற்பாடுகளென்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

எனவே, பூரண மனிதனை உருவாக்கவும், ஆரோக்கியமான சமுதாய அமைப்புக்களைக் கட்டி எழுப்பவும், தூய்மையான சிந்தனைகளை வளர்த்துக்கொள்ளவும் வாசிப்புப் பழக்கத்தை மகுடமாக சூடிக்கொள்வோம்.

**அருட்தந்தை ம. றெக்ஸ் சவுந்தரா**
பங்குத் தந்தை
சுன்னாகம்

# அதிபர் உள்ளத்திலிருந்து எழும் அறிக்கை

புனித அந்தோனியாரினதும் சுன்னாகம் கதிரமலை சிவனின் பாதார விந்தங்களையும் பணிந்து போற்றி அறிவொடு ஒழுக்கமும் அன்போடு பண்பும் தந்து மாணவச் செல்வங்களை உருவாக்கி வரும் எம் கலைக்கூட தாய்க்கு தலை சாய்த்து நிறுவிய வள்ளல்களை நினைவிருத்தி 2015ஆம் ஆண்டுக்குரிய ஒளிவிழா மற்றும் பரிசளிப்பு விழா சஞ்சிகை வெளியிடு ஆகியவற்றிற்கும் ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் அருட் தந்தை. ம. றெக்ஸ்சவுந்தரா அடிகளார் அவர்களே!

இந்நிகழ்விற்கு ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் முத்தமிழ்க்குருமணி, சகலாகமசங்கிரகர் சிவஸ்ரீ. நா. சர்வேஸ்வரக் குருக்கள் அவர்களே!

எமது அன்பான அழைப்பை ஏற்று விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வடக்கு மாகாணவபை உறுப்பினர் திரு. பா. கஜதீபன் அவர்களே!

சிறப்பு விருந்தினர்கள் வரிசையில் உடுவில் கோட்டக் கல்வி அலுவலர் திரு. சு. சண்முககுலகுமாரன் அவர்களே!

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி. அ. ஜெயக்குமாரன் அவர்களே!

இன்று நினைவுப் பேருரை வழங்க வருகை தந்திருக்கும் பாடசாலையின் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியையுமான திருமதி. ம. மத்தியூஸ் அவர்களே!

இன்று வெளிவரும் "மகுடம்" சஞ்சிகையின் வெளியீட்டுரை நிகழ்த்த வருகை தந்திருக்கும் யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் உப அதிபர் திரு. த. மோகன்ராஜ் அவர்களே!

“மகுடம்” சஞ்சிகையின் மதிப்பீட்டுரை ஆற்றுவதற்கு வருகை தந்திருக்கும் யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திரு.ம.பா.மகாலிங்கசிவம் அவர்களே!

சகோதரப் பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! முன்னாள் அதிபர்களே! ஆசிரியர்களே! உதவிக் கல்விப் பணிப்பாளர் அவர்களே! ஆசிரிய ஆலோசகர்களே! எமது பாட சாலையின் உயர்வுக்காய் அயராது உழைத்து நிற்கும் ஆசிரிய பெருந்தகைகளே! பழைய மாணவர்களே! நலன் விரும்பிகளே! அன்பான மாணவச் செல்வங்களே! அன்பான பெற்றோர்களே! உங்கள் அனைவருக்கும் உளம் கனிந்த வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு அனைவரையும் வருக வருகவென இருகரம் கூப்பி வரவேற்பதில் பேருவகை அடைகின்றேன்.

தற்போது ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் அருட்தந்தை. ம.றெக்ஸ்சவுந்தரா அடிகளார் பலாலியை பிறப்பிடமாகக் கொண்டவர். திரு. திருமதி. மனுவேற்பிள்ளை மேரிறோசலின் தம்பதியினருக்கு மகனாக பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/மயிலிட்டி றோ.க.த.க. பாடசாலையிலும் தரம் 6-8 வரை யா/பலாலி அரசினர்தமிழ் கலவன் பாடசாலையிலும் தரம் 9 முதல் க.பொ.த உயர்தரம் வரை யா/சென்பற்றிக்ஸ் கல்லூரியிலும் கற்று தொடர்ந்து 8 வருடங்கள் யா/புனித பிரான்சிஸ் குருத்துவக் கல்லூரியில் குருத்துவப் பயிற்சி பயின்று 1996.07.11 திகதியன்று குருபட்டம் பெற்றார். வன்னிப் பிரதேசத்தில் 4 வருடங்கள் குருத்துவம் பணியாற்றி பின் ஒரு வருடம் யாழ்ப்பாணத்தில் குருத்துவப் பணியாற்றி இத்தாலி நாட்டின் தலைநகர் றோமில் (Rome) மெய்யியலில் முதுகலைமாணி பட்டத்தைப் பெற்றார். 2005ஆம் ஆண்டு மீண்டும் கொய்யாத்தோட்டத்தில் குருத்துவப் பணியையும் குருத்துவக் கல்லூரியில் குருத்துவ மாணவர்களுக்கு மெய்யியல் பாடத்தையும் கற்பித்தார். 2010ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை மல்லாகம் குளமங்கால் பங்கில் இணைந்து குரத்துவக் கல்லூரியில் மாணவர்களுக்கு மெய்யியல் பாடத்தையும் பங்கில் உள்ள தேவாலயங்களில் குருத்துவப் பணியையும், யா/சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலயத்திலும் பங்குத் தந்தையாகவும்

பணியாற்றி வருகின்றார். இவர் இன்று வெளிவரும் மகுடம் சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்கியுள்ளார். எமது பாடசாலை வளர்ச்சிப் பாதைக்கு எம்மோடு இணைந்து எமக்கு உதவுவார். அந்த வகையில் இன்றும் எமது அழைப்பை ஏற்று பல வேலைச் சுமைகளுக்கு மத்தியிலும் வருகை தந்தமை எம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துவதுடன் அடிகளார் அவர்கள் தேக ஆரோக்கியத்துடன் நீண்ட ஆயுள் பெற்று சிறப்பாக இறைபணியாற்ற வேண்டும் என இறையாசியை வேண்டி அவரை வரவேற்பதில் பேருவகை அடைகின்றேன்.

அடுத்து ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் முத்தமிழ்க் குருமணி சகலாகமசங்கரர் சிவஸ்ரீ. நா. சர்வேஸ்வரக் குருக்கள் அவர்கள் சண்டிலிப்பாய் என்ற ஊரில் திரு. திருமதி. நாகேஸ்வரக் குருக்கள் தேவகுஞ்சராம்பாள் தம்பதிகளின் மகனாக பிறந்தார். யா/வேலணை மத்திய மாகா வித்தியாலயத்தில் கல்வியைக் கற்றார். யாழ்ப்பாணத்திலுள்ள சிவானந்த குருகுலம் சமஸ்கிருத பாடசாலையிலும் சிதம்பரம் ராமநாத தீகத்சிதர் வேதாகம பாடசாலையில் வேதங்களை சிறப்புறக் கற்றார். இவர் சாந்தி அம்மாவை திருமணம் செய்து சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானத்தில் பிரதம குருவாக இருந்து பூஜைக் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

எமது பாடசாலையின் நிகழ்வுகள் நடாத்துவதற்கு வளமான மண்டப வளம் இல்லாத நிலையில் நாம் கேட்ட போது எவ்வித மறுப்புமின்றி உடனடியாக எமக்கு தந்து விழா சிறப்பாக இடம் பெற ஆசியுரையை வழங்கியும் மண்டபம், கதிரைகள், மேடை, மின்சாரம் போன்றவற்றை எவ்வித கட்டணமின்றி எமக்கு மனமுவந்து தந்துள்ளார். ஐயா அவர்கள் எமது பாடசாலைக்கு பல்வேறு வழிகளில் உதவுவார் என்றும் தேக ஆரோக்கியத்துடன் நீண்ட ஆயுள் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டிநிற்கின்றேன்.

பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர் திரு. பா. கஜதீபன் அவர்கள்

ஏழாலை என்ற புனித ஊரில் திரு. திருமதி. பாலச்சந்திரன் அவர் களுக்கு மகனாகப் பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வியை யா/ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாட சாலையிலும் இடைநிலை கல்வியையும் உயர் கல்வியையும் யா/இந்துக் கல்லூரியிலும் கற்றார்.

கலைப்பட்டதாரியான இவர் தீவக வலயத்தில் ஏழு வருடங் களாக அர்ப்பணிப்புடன் தமது ஆசிரிய சேவையை ஆற்றினார். இவர் யா/கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி நெறியை மேற்கொண்டிருந்த வேளை எமது பிரதேச மக்களின் அவலங்களை கண்டு அதற்காக குரல் கொடுக்க மனந்துணிந்து பயிற்சி நெறியை முழுமை பெறாது மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் வடக்கு மாகாணசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

2013ஆம் ஆண்டில் வடக்கு மாகாணசபை உறுப்பினராக பதவியேற்ற காலம் முதல் இன்று வரை அன்றாடம் மக்கள் எதிர் நோக்கும் அடிப்படைத் தேவைகளை தீர்த்து வருவதுடன் கல்விச் சமூகத்தின் அடிப்படைத் தேவைகளையும் அன்றாட தேவை களையும் தீர்த்து வருவதும் கல்விச் சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதில் அயராது அரும் மணியாற்றினார்.

இனி வரும் காலத்தில் எமது பாடசாலையை தற்கால நவீன சூழலுக்கேற்ப பல இடர்களை நீக்கி ஆரோக்கியமான கற்றல் சூழலை பெற பல பௌதீகவளத் தேவைகளை பெற்று மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்குரிய வாய்ப்புக் களை மனமார வழங்க ஏற்பாடுகளை செய்து தருவார் என பாடசாலை சமூகம் எதிர்பார்க்கின்றது. இவர் அண்மையில் இல்லற வாழ்வில் இணைந்துள்ளார். இல்லற வாழ்வில் தம் பாரியாருடன் இணைந்து 16 செல்வங்களையும் பெற்று பல பதவி உயர்வு களையும் சிறப்பாக பெற அகமகிழ்ந்து வாழ்த்துவதுடன் இன்றைய நன்நாளில் பிரதம விருந்தினராக கலந்து எம்மை சிறப்பித்து இருப்பது எமது பாடசாலை சமூகம் பேருவகை அடைகின்றது.

அடுத்து சிறப்பு விருந்தினர்கள் வரிசையில் வருகை தந்திருக்கும் எமது உடுவில் கோட்டக் கல்வி அலுவலரான திரு சு. சண்முககுலகுமாரன் அவர்கள் திரு. திருமதி. சுப்பையா நல்லம்மா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வியை யா/இணுவில் மத்திய கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியையும் உயர் கல்வியையும் யா/கொக்குவில் இந்து கல்லூரியிலும் கற்றார்.

இவர் முதுகலைமாணி, கலைப்பட்டதாரி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா, பயிற்றப்பட்ட விஞ்ஞானம், அதிபர் சேவை தரம் போன்ற பட்டங்களை தன்னகத்தே கொண்டுள்ளார். இயல்பாகவே அன்புடன் கூடிய கண்டிப்பும், அர்ப்பணிப்பும், தியாக சிந்தனையும் உடையவர். தனது அலுவலகப் பணியைப் பாராது கீழ் இறங்கி வந்து பணியாற்றுகின்ற உயர்ந்த மனப்பாங்கை உடையவர். எமது வலயத்தின் பாடசாலைத் தேவைகளையும் தானாகவே அறிந்து நிறைவேற்றும் உயர்குணம் படைத்த பெருமகனாக இவர் விளங்கு கின்றார். பாடசாலைகளின் அபிவிருத்திக்காக சிறந்த நிர்வாக நுட்பங்களைப் பயன்படுத்தி முரண்பாடுகளின்றி எம்மை பாராட்டி உற்சாகமூட்டி பணிபுந்து வரும் உத்தமனார். இவர் எல்லா வகைச் சிறப்பும் பெற்று விளங்க அகமகிழ்ந்து வாழ்த்துவதுடன் அவரை வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

வைத்திய கலாநிதி. அ. ஜெயக்குமாரன் அவர்கள் சுன்னாகம் ஊரைச் சேர்ந்த திரு. வைத்திய கலாநிதி அருமை நாயகம் வைத்திய கலாநிதி அ. சற்குணசரோஜினி தம்பதி யினருக்கு மகனாகப் பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வியை யா/ஊரணி எமிலியானுஸ் கனிஸ்ட வித்தியாலத்திலும் யாழ் மயிலணி சைவ மகாவித்தியாலயத்திலும் பயின்று, இடை நிலைக் கல்வியையும், உயர்கல்வியையும் யா/இந்துக் கல்லூரியில் கற்றார். ரஷ்ய நாட்டிலுள்ள சிமொனெஸ் மருத்துவப் பல்கலைக் கழகத்தில் வைத்திய கலாநிதி பட்டம் பெற்றார். திருகோணமலை ஆதார வைத்தியசாலையிலும், யாழ்ப்பாண போதனா வைத்திய சாலையிலும் வைத்திய அதிகாரியாகவும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகராகவும் அரும்

பணியாற்றினார். தற்போது மலேரியா தடைப்பிரிவின் யாழ் பிராந்திய வைத்திய அதிகாரியாகவும், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரியாகவும் சிறப்பாக எமக்கும் மக்களுக்கும் சேவையாற்றி வருகிறார். உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப் பட்டு மதிய உணவு திட்டத்தினை சிறப்பாக நடைமுறைப்படுத்த சமையலாளர்களுக்குரிய கொடுப்பனவாக 2015ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் முதல் தலா ரூபா மூவாயிரம் எமது பாட சாலைக்கு வழங்கி வருகின்றார். இவர் எல்லா வகைச் சிறப்புப் பெற்று விளங்க அகமகிழ்ந்து வாழ்த்துவதுடன் அவரை வரவேற்கின்றேன்.

நினைவு பேருரையாற்றுவதற்கு வருகை தந்திருக்கும் எமது பாடசாலையின் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியையு மான திருமதி.மத்தியூஸ் மரியகொற்றி அவர்கள் சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் திரு. திருமதி. சிங்கராயர் அவர்களின் மகளாவார். இவர் எமது பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் இடைநிலைக் கல்வியை யா/இராமநாதன் கல்லூரியிலும் உயர் கல்வியை யா/புனித திரேசா கல்லூரியிலும் கல்வியை சிறப்புறக் கற்றார்.

1983ஆம் ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டு வரை எமது பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக அரும்பணியாற்றினார். இவர் இயல்பாகவே அர்ப்பணிப்பும் தியாக சிந்தனையும் உடையவர். எமது பாடசாலையில் இடம் பெறும் விழாக்கள், நிகழ்வுகளுக்கு தம்மாலான அனைத்து உதவிகளையும் கலைநிகழ்வுகளையும் ஒழுங்கமைத்து பயிற்றுவித்து எமக்கு சிறப்பாக நடாத்த தாமாகவே முன் வருவார். இவர் எமது பாடசாலையின் பாரம்பரியத்தை விழுமியங்களையும் எடுத்துரைப்பதற்கு மிகவும் பொருத்தமான ஒருவர் .இப் பாடசாலையின் வரலாற்றை தெளிவுறக் கூடிய வல்லவர். இவர் எல்லா வகைச் சிறப்பும் பெற்று இறை பணியையும், பாடசாலை, முன்பள்ளி சமூகப் பணிகளையும் ஆற்றுவதற்கு அகமகிழ்ந்து வாழ்த்துவதுடன் அவரை வரவேற் பதில் பேருவகை அடைகின்றேன்.

**மாணவச் செல்வங்கள் :**

எமது பாடசாலையின் தற்போதைய மாணவர் எண்ணிக்கை 34 தொடர்ந்து எதிர் வரும் காலங்களில் மாணவ வளத்தை அதிகரிப்பதற்கு சமூகத்தின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்.

**ஆசிரியர் குழாம் :**

எமது ஆசிரியர்கள் மாணவர்களது உணர்வுகளுக்கும், உளநிலைகளுக்கும் ஏற்றாற் போல் முழுமையான கடமை உணர்வுடன் எவ்வித சலிப்புமின்றி தன்னலமற்ற அளப்பரிய சேவையை வாரி வழங்கி வருகின்றார்கள் என்றால் மிகையாகாது.

எமது பாடசாலையில் கற்கும் அதிகளவான மாணவர்கள் மெல்லக்கற்கும் மாணவர்கள் என்பதால் கல்வி அடைவுமட்டத்தை உயர்த்தும் நோக்கில் எமது ஆசிரியர்களுடன் இணைந்து மூன்று தொண்டர் ஆசிரியர்களும் சேவையாற்றுகிறார்கள் இவர்களது சேவை போற்றுதற்குரியது. வலிகாம கல்வி வலய விருது வழங்கும் விழா 2015 ஆம் ஆண்டில் எமது பாடசாலை ஆசிரியை திருமதி. ச. தர்மலிங்கம் அவர்கள் சிறந்த ஆசிரியராகத் தெரிவு செய்யப் பட்டு 16/11/2015 அன்று கௌரவிக்கப்பட்டார். அவரது ஆசிரிய சேவை சிறக்கவும் எல்லா வகைச் சிறப்பும் பெற்று விளங்க அக மகிழ்ந்து பாடசாலை சமூகம் சார்பில் வாழ்த்துகின்றேன்.

**புதிதாக இணைந்தவர்கள் :**

எமது பாடசாலையில் இவ் வருடம் எவரும் புதிதாக கடமையை ஏற்கவில்லை என்பதை அறியத்தருகின்றேன்.

**இடமாற்ற விபரம் :**

எமது பாடசாலையில் இவ் வருடம் எவரும் இடமாற்றம் பெற்று செல்லவில்லை என்பதை அறியத்தருகின்றேன்.

**கல்வி அபிவிருத்தி :**

இன்றைய சூழ்நிலையில் அனைவருக்கும் தரமான கல்வி என்ற செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது. மாணவர்கள் பாட சாலைக்கு ஒழுங்காக வருவதில்லை இவ்வாறு ஒழுங்கான

வரவின்மைக்கு காரணங்களாக கற்றல் சூழல் வீட்டில் காணப் படாமை, வறுமை, ஆர்வமின்மை, போதிய வழிகாட்டலின்மை போன்றவற்றால் கற்றல் செயற்பாட்டில் நாட்டம் குறைவாக உள்ளது. இது எமது பாடசாலையின் அடைவுமட்டம் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பாரிய தாக்கத்தை விளை விக்கிறது. அத்துடன் பல்வேறுபட்ட வசதியீனங்களுடன் தான் பாடசாலை இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மட்டத்தில் பெற்றோர் சந்திப்புக்களை நடாத்திய சில அறிவுறுத்தல்களை வழங்கி கற்றல் உபகரணங்கள், சீருடைகளை இலவசமாக வழங்கி மாணவர்களை பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தர செய்யும் முயற்சி வெற்றியளித்து வருகின்றது.

அத்துடன் கல்வி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு கல்வி திணைக்களத்தினூடாக பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப் படும் உயர்மட்டசெயற்பாடுகள், ஆசிரியர் தர வட்டம், SLIG, தர உள்ளீடு என்பன கற்றல் செயற்பாட்டை வினைத்திறன் மிக்கதும் வினைத்திறன் கொண்டதுமாக மாற்றுவதற்கு உந்து சக்தியாக விளங்குகிறது. அவற்றை பூரணமாக செயற்படுத்த அனுபவமும், ஆற்றலும் உடைய வளவாளர்களை பயன்படுத்தி கல்வி செயற்பாட்டை உயர்வடைய நடைமுறைப்படுத்துகின்றோம்.

## இணைப்பாட விதானம்

### செயற்பட்டு மகிழ்வோம்

2015ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக "செயற்பட்டு மகிழ்வோம்" என்ற தொனிப் பொருளில் விளையாட்டு நிகழ்வு 06.03.2015 அன்று வெகு சிறப்பாக இடம் பெற்றது. வலயமட்ட செயற்பட்டு மகிழ்வோம் இறுதி நிகழ்வில் எமது பாடசாலை மாணவர்களின் இடைவேளை நிகழ்ச்சியும் இடம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழ்த்தினம்**

2015ஆம் ஆண்டு கோட்டமட்டத்தில் இசைவும் அசைவும் போட்டியில் 1ம் இடத்தை தரம் 4 மாணவண் செல்வன். இ. சாத்ராக் பெற்றார். இது வரை திறம்பட வழிப்படுத்திய ஆசிரியை திருமதி. ச. தர்மலிங்கம் அவர் களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆரம்ப பிரிவு போட்டிகள்**

2015ஆம் ஆண்டில் சித்திரப் போட்டியில் தரம் 2 மாணவன் செல்வன்.அ.பிரட்றிக் ஜோய் குடும்பமட்டம் இரண்டாம் இடத்தையும் கோட்டமட்டம் இரண்டாம் இடத்தையும் வலயமட்டம் மூன்றாம் இடத்தையும் பெற்றார். இவ் பெறுபேற்றை நாம் அடைவதற்கு முன்னின்று உழைத்த ஆசிரியை திருமதி. ச. தர்மலிங்கம் அவர் களை பாராட்டி மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள் கின்றேன்.

திருக்குறள் மனனப் போட்டி குடும்பமட்டத்தில் தரம்-1 மாணவன் செல்வன். சி. றோகித் மூன்றாம் இடத்தையும் தரம்-5 மாணவன் செல்வன். சி. கபிலாஸ் குடும்பமட்டத்தில் முதலாம் இடத்தையும் கோட்டமட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றனர். இவர்களை ஊக்குவித்த ஆசிரியைகளான திருமதி. ச. தர்மலிங்கம், திருமதி க. உதயகுமாரன் ஆகியோருக்கு பாட சாலை சமூகம் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

குடும்பமட்ட செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் தரம்-5 மாணவர்கள் மூன்றாம் இடத்தை பெற்றனர். இவர்களை நெறிப்படுத்திய ஆசிரியை திருமதி. க. உதயகுமாரனுக்கும் அவருடன் இணைந்து செயற்பட்ட ஆசிரியர்களான திருமதி. ரே. குமாரதாசன், திருமதி.ச.தர்மலிங்கம் அவர்களுக்கும் இதய பூர்வமான நன்றிகளை பாடசாலை சமூகம் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குடும்பமட்ட சித்திர போட்டியில் தரம்-04 மாணவன் செல்வன். இ. சாத்ராக் மூன்றாம் இடத்தை பெற்றார். இவரை வழிப்படுத்திய ஆசிரியை செல்வி. மே. ஜெயந்தி அவர்களுக்கு நன்றிகளை பாடசாலை சமூகம் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குடும்பமட்ட துரித கணிதப் போட்டியில் தரம்-05 மாணவன் செல்வன். சி. சிவநாத் மூன்றாம் இடத்தையும் குடும்பமட்ட பொது அறிவுப் போட்டியில் தரம்-05 மாணவர்கள் மூன்றாம் இடத்தையும் பெற்றனர். இதற்கு முன்னின்று உழைத்த ஆசிரியை திருமதி. க. உதயகுமாரனுக்கு பாடசாலை சமூகம் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மன்றங்கள்**

மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கும் ஆளுமை விருத்திக்கும் மன்றச் செயற்பாடுகளும் ஒன்றாகும். செயற்பாடு அவர்களின் ஆளுமையை விருத்தி செய்து தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதே நோக்கமாகும். அந்த வகையில் மாணவர் மன்றம், கிறிஸ்தவ மன்றம், இந்துமாமன்றம், சுகாதர மன்றம் என்பன செயற்படுகின்றன.

**உலக சிறுவர் தினம்**

அதிபர், ஆசிரியர், பெற்றோரான திருமதி. லூ. ம. நொயலின் ஆகியோரின் ஒத்துழைப்புடன் 01.10.2015 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. அந் நிகழ்விற்கு பிரதம விருந்தினரான வலிகாம கல்வி வலய வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரிய ஆலோசகர் திருமதி.பி.அம்பிகைபாகன் மாணவர்களுக்கு சிறப்பாக கருத்துரைகள் வழங்கி அன்றைய தினம் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றது. தொடர்ந்து அன்பளிப்புப் பொருட்கள் சுவையான உணவுகள் மாணவர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

சிறுவர் தின வாரத்தை முன்னிட்டு மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் வைத்திய அதிகாரி (உடுவில்) திரு. அ. ஜெயக்குமாரன் அவர்களும் சுன்னாகம் பொதுச்சுகாதார பரிசோதகர் திரு. கி. அஜந்தன் அவர்களும் 07.10.2015 அன்று சுகாதாரமும் போசாக்கும் என்ற தலைப்பில் விழிப்புணர்வு

கருத்துரைகளை பல்லூடக எறியியினைப் பயன்படுத்தி சிறப்பாக விளக்கமளித்தார்கள்.

**மதிய உணவு**

உலக உணவுத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மதிய உணவு மாணவர்களின் வருகையை சீராக்குவதற்கும் ஆரோக்கியத்தையும் ஏற்படுத்துவதற்கு போசாக்கு மிக்க உணவூட்டத்தை வழங்கி தரமான கல்வியை சிறப்பாக மேற்கொள்வதற்கு மிகவும் பயனுடையதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்காக சமையலாளர்களான திரு. திருமதி. பீற்றர் அவர்கள் அர்ப்பணிப்புடன் தன்னலமற்ற சேவையை வழங்கி வருகின்றனர். மேலும் இத் திட்டத்திற்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றொர்கள் வைத்திய அதிகாரி (உடுவில்) திரு.அ.ஜெயக்குமாரன் அவர்கள் மற்றும் எமது பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியருமான திருமதி. ம. மரியகொறட்டி அவர்களும் நலன் விரும்பி திரு. உ. பரராஜசேகரம் அவர்களும் பெரிதும் கைகொடுத்து உதவுகின்றனர். மதிய உணவு திட்டத்திற்கு பொறுப்பாசிரியராக செல்வி. மே. ஜெயந்தி அவர்கள் செயற்படுகின்றார். மதிய உணவை சுகாதாரமாகவும் போசாக்காகவும் வழங்குவதற்கு சமையலறை ஒன்று அவசியமாகும். எனவே அத்தேவையை எமக்கு பாராளுமன்ற உறுப்பினர் திரு.தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களின் நிதி மூலம் நிறைவேற்றியுள்ளோம். பாராமன்ற உறுப்பினருக்கு பாடசாலை சமூகம் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஒழுக்காற்றுக்குழு**

அதிபரது தலைமையில் ஒழுக்காற்றுக்குழு செயற்படுகின்றது. ஆசிரியர்கள் ஒத்துழைப்புடன் மாணவர்கள் ஒழுக்க விதிகளை கடைப்பிடித்து ஒழுக்க சீலர்களாக திகழ வழிப்படுத்தப்படுகின்றனர்.

**விசேட கல்வி**

எமது பாடசாலையில் மாணவர்கள் விசேட தேவையுடைய மாணவர்களாக காணப்படுகின்றனர். செயற்கைக் கையை அவுஸ்ரோலியா றோட்டறிக் கழகம் செல்வன். சி. சிவஸ்ரீன் என்ற

மாணவனுக்கு பிளாஸ்ரிக் கையை பொருத்தி அவருடைய கற்றல் செயற்பாட்டிற்கு உதவியது. இவ் உபகரணத்தை எமக்கு பெற்று தந்த எமது பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் திரு.இ.எயுயீன்மசனட் அவர்களுக்கும் இவ் உதவியை எமக்கு அளித்த அவுஸ்ரோலியா றோட்டறிக் கழகத்திற்கும் எம் பாடசாலையின் சார்பிலும் பாடசாலை சமூகம் சார்பிலும் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலவசமாக வலிகாமம் கல்வி வலய ஏற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்கள் 31.10.2015, 01.11.2015 ஆகிய தினங்களில் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டனர். அச் சுற்றுலாவில் பொறுப்பாசிரியர் திருமதி. ச. தர்மலிங்கம், மாணவன் சி. சிவஸ்ரீன் ஆகிய இருவரும் மகிழ்ச்சிகரமாக சுற்றுலாவில் பங்கு பற்றினார்கள். இவ் ஒழுங்கை ஏற்பாடு செய்த வலயத்திற்கு பாடசாலை சமூகம் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆசிரியர் கழகம்**

ஒற்றுமை உணர்வுடன் ஆசிரியர்களது நலன் பேணி அங்கத்தவர் சார்ந்த குடும்ப உறுப்பினர்களின் மங்கள அமங்கள நிகழ்வுகளில் கலந்து கொள்ளல், அன்பளிப்புப் பொருட்களை வழங்கியும் பிரிவு உபசார விழாக்களை நடாத்துவதுடன் பாராட்டுக்களையும், கண்ணீர் அஞ்சலி தெரிவிப்பதையும் செயற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் பாடசாலை மாணவர்களின் நலன்களையும் தேவைகளையும் நிறைவு செய்வதற்கு இக் கழகம் உதவி வருகின்றது.

**ஆசிரியர் தினம்**

06.10.2015 அன்று பெற்றோர்களின் முழுமையான முயற்சியினால் ஆசிரியர் தினம் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இவ்நிகழ்வில் ஆசிரியர்களை மாலை அணிவித்து கௌரவித்து சிறப்புரைகள், பரிசில்கள் வழங்கல், சிற்றுண்டிகள் வழங்கல், கலைநிகழ்வுகள், ஆசிரியர்களுக்கிடையில் போட்டிகள் நடாத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கு பரிசில் வழங்கல் போன்ற செயற்

பாடுகள் பெற்றோர்களால் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வை முன் வந்து நடாத்திய அனைத்துப் பெற்றோருக்கும் எமது பாட சாலையின் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியருமான திருமதி. ம. மரியகொறட்டி அவர்களுக்கும் பாடசாலை சமூகம் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக திரு.இ.எயுயீன்மசனட் அவர்களும் ஏனைய உறுப்பினர்களும் இங்கு இடம் பெறும் செயற்பாடுகளுக்கு தம்மாலான இயன்றளவு உதவியை நல்கி எமக்கு ஒத்துழைத்து வருகின்றனர். மேலும் எமக்கு கூடுதலான உதவிகளை செய்வதற்கு வேண்டி நிற் கின்றோம்.

**ஆங்கில முகாம்**

2015ஆம் ஆண்டிற்கான SLIG செயற்திட்டத்தின் கீழ் எமது பாடசாலையில் ஆங்கில முகாமை 23.10.2015 அன்று வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி. பா. சிவன்சேய் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். இம் முகாமிற்கு பெற்றோர்கள் வந்து பார்வையிட்டனர்.

**நாமும் சந்தையும்**

அன்று ஆசிரியர்களின் வழிகாட்டலில் பெற்றோர்களினதும் மாணவர்களினதும் முழுமையான பங்களிப்புடன் நாமும் சந்தையும் செயற்பாடு இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி. பா. சிவன்சேய் கலந்து சிறப்பித்தார்.

**திறப்பு விழா**

சமையலறைக் கூடம் 15.10.2015 அன்று அருட்தந்தை. ம. றெக்ஸ் சவுந்தரா அடிகளார் அவர்களால் திறந்துவைக்கப்பட்டு ஆசிர்வதிக் கப்பட்டது. அன்றைய தினம் நலன் விரும்பி திரு. உ.பரராஜசேகரம் அவர்கள் திருமதி. உமாபதிசிவம் நினைவாக அனைத்து மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கினார்.

மாணவர்கள் அனைவருக்கும் மதிய உணவை பாராளுமன்ற உறுப்பினர் திரு.தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கள் பரிமாறினார்.

### கண்காட்சி

05.11.2015 அன்று பாடசாலை மட்டத்தில் கண்காட்சி சிறப்பாக இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி. சி.பாரதி அவர்களும் முறைசாரா ஆசிரிய ஆலோசகர் திருமதி. சி. கமல்ராஜ் அவர் களும் கலந்து சிறப்பித்தார்கள். ஆசிரியர்களதும் மாணவர் களினதும் பெற்றோர்களினதும் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இவர்களது பங்களிப்புக்கள் அனைத்தும் பாராட்டுக்குரியது.

### பெறப்பட்ட கட்டட வளங்கள்

2015ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கள் வடக்கு மாகாணசபை உறுப்பினராக இருந்த வேளை சமையலறை அமைப்பதற்காக ரூபாய் ஒரு லட்சம் நிதியினை எமக்கு தந்து உதவி சமையலறை அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நிதி உதவி வழங்கிய பாராளுமன்ற உறுப்பினருக்கு பாடசாலை சமூகம் சார்பில் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வலிகாமம் கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் உயர்திரு செ. சந்திரராஜா அவர்களின் சிபார்சில் சிறு திருத்தத்திற்காக ரூபா 199 ஒதுக்கப்பட்ட நிதியில் 40'X20' அளவுடைய வகுப்பறை, அதிபர் அலுவலகம் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் விளங்கு கின்றது. இதனை சிபார்சு செய்து செயற்படுத்த உதவியமைக்காக வலயக் கல்விப்பணிப்பாளருக்கு பாடசாலை சமூகம் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேற்கூறப்பட்ட செயற்பாடுகளினை சிறந்த முறைளில் நிறைவாக செயற்படுத்த உதவிய வலிகாமம் கல்வி வலய பாடசாலைகள் வேலைகள் பகுதி தொழில்நுட்ப உத்தியோகத்தர்

திரு. சி. கோகுலன் அவர்களுக்கும் பாடசாலைச் சமூகம் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பாடசாலைத் தேவைகள்**

எமது பாடசாலையில் பல்வேறு பௌதீக, மனித வளப்பற்றாக்குறையுடன் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதாவது

1) பாடசாலை வளாகத்தின் ஆரோக்கியத்தையும் பாதுகாப் பினையும் கருதி முன்புற பின்புற மதில்.
2) சிறந்த கற்றலை மேம்படுத்த அதிபர் அலுவலகம் உட்பட 1-5 வரையான வகுப்பறைகள் கொண்ட நிரந்தரக் கட்டடம்.
3) போட்டோ பிரதி இயந்திரம்.
4) அதிபர் அலுவலகம், வகுப்பறைகளுக்கான அலுமாரிகள்.
5) பாடசாலையின் பெயர்ப்பலகை.
6) கணனிகள்
7) நுழைவாயில் புனரமைத்தல்.
8) அறிவிப்புப் பலகை.
9) பல்லூடக எறியி.
10) ஆசிரியர், மாணவர் மலசல கூடம் அமைத்தல் | திருத்தல்.

**மனித வளத்தேவைகள்**

1) முழு நேர ஆங்கில ஆசிரியர்.
2) கிறிஸ்தவ மதத்தை சேர்ந்த ஆரம்பக்கல்வி ஆசிரியர்.
3) சுத்திகரிப்புத் தொழிலாளர். (பகுதி நேரமானது)

மேற்குறிப்பிட்ட தேவைகளை நிறைவேற்ற அரச, அரச சார்பற்ற, பழைய மாணவர்கள் மற்றும் பரோபகரிகளின் நிதியுதவி களையும் மனிதவள உதவிகளையும் வேண்டி நிற்கின்றேன்.

நிறைவுரை

இன்று நடைபெறுகின்ற ஒளிவிழாவும் பரிசளிப்பு விழாவும் மகுடம் சஞ்சிகை வெளியீடும் -2015 நிகழ்விற்கு ஆசியுரைகளை வழங்கி எங்களையும் விழாவினையும் வாழ்த்திப் பாராட்டிய அருட் தந்தை ம. றெக்ஸ் சவுந்தரா அடிகளார் அவர்களுக்கும், சிவஸ்ரீ. நா. சர்வேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கும் இதயபூர்வமான நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல்வேறு வேலைச்சுமைகளுக்கு மத்தியிலும் இவ் விழா விற்கு எவ்வித மறுப்புமின்றி பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வடமாகாணசபை உறுப்பினர் கௌரவ உயர்திரு பா. கஜதீபன் அவர்களுக்கும் எங்கள் நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் சிறப்பு விருந்தினராககலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் உடுவில் கோட்டக் கல்வி அலுவலர் திரு. சு. சண்முககுலகுமாரன் அவர்களுக்கும் வைத்திய அதிகாரி திரு. அ. ஜெயக்கமாரன் அவர்களுக்கும் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து எமது தேவையறிந்து நினைவுப் பேருரை ஆற்றுவதற்கு வருகை தந்திருக்கும் திருமதி ம. மத்தியூஸ் அவர்களுக்கும் எங்கள் நன்றிப் பூக்களைந் சொரிகின்றேன்.

“மகுடம்” சஞ்சிகை வெளியீட்டுரையை நிகழ்த்த வருகை தந்திருக்கும் திரு. த. மோகனராஜ் அவர்களுக்கும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

“மகுடம்” சஞ்சிகையை ஆய்வு செய்து மதிப்பீட்டுரையை நிகழ்த்துவதற்கு வருகை தந்த திரு. ம. பா. மகாலிங்கசிவம் அவர் களுக்கும் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

இன்று இவ்விழா வெகு சிறப்பாக இடம்பெறுவதற்காக அழைப்பிதழ், பரிசுப் பொருட்கள், சிற்றுண்டிகள், ஒலிஅமைப்பு, மேடை அலங்காரம் போன்றவற்றிற்கான செலவினை அமரர் வைத்தியகலாநிதி கபிரியேல் ஜோர்ச் நினைவாக திரு. ஜோர்ச் ஆஞ்சலோ அவர்கள் மனமுவந்து எமக்குத் தந்து உதவியளித்த பெருந்தகைக்கு இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய நிகழ்வு மங்களகரமாகவும் வெகு சிறப்பாக நடைபெறுவதற்கு எமக்கு மண்டபம், கதிரைகள், மேடை, மின்சாரம் என்பவற்றை பெருந்தன்மையுடன் தந்து உதவிய சிவஸ்ரீ. நா. சர்வேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கும், தேவஸ்தான நிர்வாகத்தினருக்கும் உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் அதிபர் அறிக்கையுடன் இணைந்த மகுடம் சஞ்சிகையை வெளியிடுவதற்கான நிதி உதவியை வழங்கிய அமிர்த நிதியம் புதுமடம் அவர்களுக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2015ஆம் ஆண்டு ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற செல்வி அ. ஜோசற் லௌறா என்ற மாணவிக்கு அமரர் திருமதி நவரத்தினம் நினைவாக திரு. ந. விக்கினேஸ்வரன் அவர்கள் வழங்குகின்றார். அவருக்கு இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விழா சிறப்புற நடைபெற கலை நிகழ்வுகளை ஒழுங்கமைத்து பயிற்றுவித்த எமது பாடசாலையின் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியருமான திருமதி ம. மத்தியூஸ் அவர்களுக்கும் பழைய மாணவி செல்வி பீ. பிரியந்தா அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விழாவிற்கு பல்வேறு வழிகளிலும் முன்னின்று எமக்குக் கரம்கொடுத்து உதவிய ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் நன்றிகளை அகமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நிகழ்விற்கு வருகை தந்துள்ள பாடசாலை அபி விருத்திக்குழு உறுப்பினர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வேறுபாடசாலை அதிபர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றிப்பூக்களைச் சொரிகின்றோம்.

எமது பாடசாலையில் அதிக நலன்காட்டி எம்மை வழிகாட்டி வளர்த்துவரும் மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அலுவலர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரிய வளவாளர்கள் அனைவருக்கும் இன்றைய நாளில் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெிவித்துக்கொள் கின்றேன்.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு உன்னத இலட் சியத்துடன் தோல்கொடுக்கும் உபஅதிபர், ஆசிரியர்கள் அனை வருக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விழாவிற்கு உரியவேளையில் அழைப்பிதழினை அச்சிட்டுத் தந்த கிருஸ்ணா பிறிண்டேர்ஸ்க்கும், 'மகுடம்'' சஞ்சிகையை காலதாமதமின்றி சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த விக்னேஸ் பிறிண்டேர்ஸ்க்கும், பல்வேறு உதவிகளை வழங்கிய அனைத்து அன்பான உள்ளங்களுக்கும் நன்றிப் பூக்களை தெரிவித்து அதிபர் அறிக்கையை நிறைவு செய் கின்றேன்.

**திருமதி யாமினி சதீஸ்குமார்**
அதிபர்

# எமது பாடசாலை ஆசிரியர் குழாம் - 2015

1) திருமதி.யா.சதீஸ்குமார் - SLTS - 2II - HNDA, Pri - Trd
PGDip In .SP.Need
2) செல்வி.மே.ஜெயந்தி - SLTS - I Pri - Trd
3) திருமதி.ரே.குமாரதாசன் - SLTS - 2II - Pri - Trd
4) திருமதி.க.உதயகுமாரன் - SLTS - 2II - BA,
Dip in Edu
5) திருமதி.ச.தர்மலிங்கம் - SLTS - 2I - Pri - Trd
6) திருமதி.அ.உதயகுமார் - SLTS - 3I Eng - Trd

**தொண்டர் ஆசிரியர்கள்**

1) திரு.பா.தபோதரன் - G.C.E A/L
2) செல்வி.ப.கிரிஜா - G.C.E A/L
3) செல்வி.வி.மேரிநித்தியா - G.G.E A/L

# எமது பாடசாலையில் இயங்கும் மன்றங்கள்

**மாணவர் மன்றம்**

தலைவர் : செல்வன்.சி.கபிலாஸ்
செயலாளர் : செல்வி.அ.ஜோசற்லௌறா
பொருளாளர் : செல்வன்.சி.சிவநாத்
பொறுப்பாசிரியர் : திருமதி.ரே.குமாரதாசன்

**இந்துமாமன்றம்**

தலைவர் : செல்வன்.சு.வதுர்சன்
செயலாளர் : செல்வி.வ.டிலைக்ஷனா
பொருளாளர் : செல்வன்.சி.ஆதவன்
பொறுப்பாசிரியர் : திருமதி.ச.தர்மலிங்கம்

**கிறிஸ்தவ மன்றம்**

தலைவர் : செல்வி.எ.திவ்வியா

செயலாளர் : செல்வன்.இ.சாத்ராக்
பொருளாளர் : செல்வி.அ.ஜோசற்லௌறா
பொறுப்பாசிரியர் : செல்வி.வி.மேரிநித்தியா
(தொண்டர் ஆசிரியர்)

**சுகாதார மன்றம்**

தலைவர் : செல்வன்.சி.சிவநாத்
செயலாளர் : செல்வன்.இ.சாத்ராக்
பொருளாளர் : செல்வி.எ.திவ்யா
பொறுப்பாசிரியர் : திருமதி.க.உதயகுமாரன்

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

தலைவர் : திருமதி.யா.சதீஸ்குமார
செயலாளர் : திரு.இ.எயுயீன்மசனட்
பொருளாளர் : செல்வி.மே.ஜெயந்தி

✧ ✧ ✧

**அனுசரணை :**

**அமரர் வைத்திய கலாநிதி கபிரியேல் ஜோர்ஜ் நினைவாக வழங்குபவர்
- திரு. க. ஆஞ்சலோ ஞானேஸ்வரன் அவர்கள்**

## பாடரீதியாகப் பரிசில் பெறுவோர் - 2014

**தரம் - 01**

1) செல்வன்.செ.தாரணிகன் - தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், பொதுத்தேர்ச்சி
2) செல்வன்.அ.ஷறோன் ஏஞ்சல் - R.C.சமயம்

**தரம் - 02**

1) செல்வன்.யோ.கன்யூட் - பொதுத்தேர்ச்சி,சுற்றாடல்,கணிதம்
2) செல்வி.அ.றோஜாமிஸ்ரிக்கா - தமிழ்,R.C.சமயம்
3) செவ்வி.சு.வதுர்சனா - இந்து சமயம்

**தரம் - 03**

1) செல்வி.அ.அன்ரனி நிருஜா - பொதுத்தேர்ச்சி, தமிழ், ஆங்கிலம், கணிதம், R.C.சமயம்

2) செல்வி.வ.டிசானி - இந்து சமயம்

**தரம் - 04**

1) செல்வி. அ. ஜோசற்லெளறா - பொதுத்தேர்ச்சி, தமிழ், R.C.சமயம், ஆங்கிலம்

2) செல்வன். சி.சிவநாத் - சுற்றாடல், கணிதம், சமயம்

**தரம் - 05**

1) செல்வி. சி. லத்திகா - பொதுத்தேர்ச்சி

## 2015ல் சிறப்புப் பரிசு பெறுவோர் விபரம்

| மாணவர் பெயர் | தரம் | போட்டி | நிலை |
|---|---|---|---|
| செல்வன்.சி.றோகித் | 01 | திருக்குறள் மனனம் | குடும்பம் 3ம் இடம் |
| செல்வன்.அ.பிரட்றிக்ஜோய் | 02 | சித்திரம் | குடும்பம் 2ம் இடம்<br>கோட்டம் 2ம் இடம்<br>வலயம் 3ம் இடம் |
| செல்வன்.இ.சாத்ராக் | 04 | சித்திரம் | குடும்பம் 3ம் இடம் |
| செல்வன்.இ.சாத்ராக் | 04 | இசையும் அசைவும் | கோட்டம் 2ம் இடம் |
| செல்வன்.சி.சிவநாத் | 05 | துரித கணிதம் | குடும்பம் 3ம் இடம் |
| செல்வன்.சி.சிவநாத்<br>செல்வன்.சி.கபிலாஸ்<br>செல்வி.அ.ஜோசற்லெளறா<br>செல்வி.எ.திவ்வியா<br>செல்வி.வ.டிலைக்ஷனா | 05<br>05<br>05<br>05<br>05 | பொது அறிவு | குடும்பம் 3ம் இடம் |
| செல்வன்.சி.கபிலாஸ் | 05 | திருக்குறள் மனனம் | குடும்பம் 1ம் இடம்<br>கோட்டம் 2ம் இடம் |
| செல்வன்.சு.வதுர்சன்<br>செல்வன்.சி.கபிலாஸ்<br>செல்வன்.சி.சிவநாத்<br>செல்வன்.து.டெனிஸ்ரன்<br>செல்வன்.சி.ஆதவன்<br>செல்வன்.ம.மதுஷன்<br>செல்வன்.இ.சாத்ராக்<br>செல்வன்.த.விஸ்ணுபவன்<br>செல்வி.எ.திவ்வியா<br>செல்வி.அ.ஜோசற்லெளறா<br>செல்வி.வ.டிலைக்ஷனா<br>செல்வி.ச.சானுகா<br>செல்வி.அ.அன்ரனி நிருஜா<br>செல்வி.வ.டிசானி<br>செல்வி.க.காயத்திரி | 05 | செயற்பட்டு மகிழ்வோம் | குடும்பம் 3ஆம் இடம் |

**2015 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிக்கு மேல்**

- செல்வி.அ.ஜோசற்லௌறா - 144 புள்ளிகள்
- செல்வன்.சி.சிவநாத் - 140 புள்ளிகள்
- செல்வன்.சி.கபிலாஸ் - 135 புள்ளிகள்
- செல்வி.வ.டிலைக்ஷனா - 123 புள்ளிகள்
- செல்வன்.சு.வதுர்ஷன் - 105 புள்ளிகள்
- செல்வி.வா.வைஷ்ணவி - 98 புள்ளிகள்
- செல்வி.எ.திவ்வியா - 88 புள்ளிகள்
- செல்வி.த.காயத்திரி - 84 புள்ளிகள்
- செல்வன்.சி.ஆதவன் - 77 புள்ளிகள்

## நவராத்திரி விழா போட்டியில் பரிசில் பெறுவோர்

**மாலை கோர்த்தல்**

| | | | |
|---|---|---|---|
| தரம் - 01 | செல்வன்.சி.றோகித் | 1ம் | இடம் |
| தரம் - 02 | செல்வி.ஜெ.அக்ஷயா | 1ம் | இடம் |
| தரம் - 03 | செல்வி.சு.லதுர்சனா | 1ம் | இடம் |
| | செல்வன்.யோ.கன்யூட் | 2ம் | இடம் |

**சரம் கட்டல்**

| | | | |
|---|---|---|---|
| தரம் - 04 | செல்வன்.ம.மதுசன் | 1ம் | இடம் |
| | செல்வன்.இ.சாத்ராக் | 2ம் | இடம் |
| தரம் - 05 | செல்வி.வ.டிலைக்ஷனா | 1ம் | இடம் |
| | செல்வி.அ.ஜோசற்லௌறா | 2ம் | இடம் |

**தோரணம் கட்டல்**

| | | | |
|---|---|---|---|
| தரம் - 03 | செல்வி.அ.றோஜாமிஸ்ரிக்கா | 1ம் | இடம் |
| | செல்வன்.யோ.கன்யூட் | 2ம் | இடம் |
| தரம் - 04 | செல்வன்.ம.மதுசன் | 1ம் | இடம் |
| | செல்வி.அ.அன்ரனி நிருஜா | 2ம் | இடம் |
| தரம் - 05 | செல்வன்.ம.வதுர்ஷன் | 1ம் | இடம் |
| | செல்வி.அ.ஜோசற்லௌறா | 2ம் | இடம் |

**கோலம் போடுதல்**

| | | |
|---|---|---|
| தரம் - 01 | செல்வன்.சி.றோகித் | 1ம் இடம் |
| | செல்வன்.சி.அபினாஸ் | 2ம் இடம் |
| தரம் - 02 | செல்வன்.அ.பிரட்றிக்ஜோய் | 1ம் இடம் |
| | செல்வன்.செ.தாரணிகன் | 2ம் இடம் |
| தரம் - 03 | செல்வி.அ.றோஜாமிஸ்ரிக்கா | 1ம் இடம் |
| | செல்வன்.சி.சுலக்ஷன் | 2ம் இடம் |
| தரம் - 04 | செல்வி.ச.சானுகா | 1ம் இடம் |
| | செல்வன்.அ. குயின்ஸ்ரன் | 2ம் இடம் |
| தரம் - 05 | செல்வி.அ.ஜோசற்லௌறா | 1ம் இடம் |
| | செல்வன்.சி.கபிலாஸ் | 2ம் இடம் |

**சகலகலா வல்லி மாலை ஓதுதல்**

| | | |
|---|---|---|
| தரம் - 05 | செல்வி.அ.ஜோசற்லௌறா | 1ம் இடம் |
| | செல்வி.வ.டிலைக்சனா | 2ம் இடம் |

## ஒளி விழா போட்டி பரிசில் பெறுவோர் விபரம்

**செபம் ஒப்புவித்தல்**

| | | |
|---|---|---|
| தரம் - 01 | செல்வன்.சி.றோகித் | 1ம் இடம் |
| தரம் - 02 | செல்வன்.அ.பிரட்றிக்ஜோய் | 2ம் இடம் |
| | செல்வன்.அ.ஷரோன் ஏஞ்சல் | 2ம் இடம் |
| தரம் - 03 | செல்வன்.யோ.கன்யூட் | 1ம் இடம் |
| | செல்வி.அ.றோஜாமிஸ்ரிக்கா | 2ம் இடம் |
| தரம் - 04 | செல்வி.அ.அன்ரனி நிருஜா | 1ம் இடம் |
| | செல்வி.ம.ஆன்கிளரன்சியா | 2ம் இடம் |
| தரம் - 05 | செல்வி.அ.ஜோசற்லௌறா | 1ம் இடம் |
| | செல்வி.எ.திவ்வியா | 2ம் இடம் |

**கிறிஸ்தவ வினாவிடைப் போட்டி**

| | | |
|---|---|---|
| தரம் - 03 | செல்வி.அ.றோஜாமிஸ்ரிக்கா | 1ம் இடம் |
| தரம் - 04 | செல்வி.அ.அன்ரனி நிருஜா | 1ம் இடம் |

| | | |
|---|---|---|
| | செல்வன்.இ.சாத்ராக் | 2ம் இடம் |
| தரம் - 05 | செல்வி.அ.ஜோசற்லெளறா | 1ம் இடம் |
| | செல்வி.எ.திவ்வியா | 2ம் இடம் |

**ஆக்கப் போட்டி**

| | | |
|---|---|---|
| தரம் - 01 | செல்வன்.சி.றோகித் | 1ம் இடம் |
| தரம் - 02 | செல்வி.ஜெ.அக்ஷயா | 1ம் இடம் |
| | செல்வன்.அ.பிரட்றிக்ஜோய் | 2ம் இடம் |
| தரம் - 03 | செல்வி.அ.றோஜாமிஸ்ரிக்கா | 1ம் இடம் |
| தரம் - 04 | செல்வி.க.சானுகா | 1ம் இடம் |
| | செல்வி.அ.அன்ரன் நிருஜா | 2ம் இடம் |
| தரம் - 05 | செல்வி.அ.ஜோசற்லெளறா | 1ம் இடம் |
| | செல்வி.எ.திவ்வியா | 2ம் இடம் |

**பாடல் ஒப்புவித்தல்**


| | | |
|---|---|---|
| தரம் - 01 | செல்வன்.எ.போல்நியூலியன் | 1ம் இடம் |
| | செல்வி.வ.நிதர்ஷனா | 2ம் இடம் |
| தரம் - 02 | செல்வன்.செ.தாரணிகன் | 1ம் இடம் |
| | செல்வன்.அ.பிரட்றிக்ஜோய் | 2ம் இடம் |
| தரம் - 03 | செல்வன்.யோ.கன்யூட் | 1ம் இடம் |
| | செல்வி.அ.றோஜாமிஸ்ரிக்கா | 2ம் இடம் |
| தரம் - 04 | செல்வன்.அ.குயின்ஸ்ரன் | 1ம் இடம் |
| | செல்வி.அ.அன்ரனிநிருஜா | 2ம் இடம் |
| தரம் - 05 | செல்வி.எ.திவ்வியா | 1ம் இடம் |
| | செல்வி.அ.ஜோசற்லெளறா | 2ம் இடம் |

**வரவு ஒழுங்கு**

| | |
|---|---|
| தரம் - 01 | செல்வன்.எ.போல்நியூலியன் |
| தரம் - 02 | செல்வன்.சி.தாரணிகன் |
| தரம் - 03 | செல்வன்.சுலக்ஷன் |
| தரம் - 04 | செல்வன்.த.விஸ்ணுபவன் |
| தரம் - 05 | செல்வன்.சி.கபிலாஸ் |

**2015 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை**

அதிககூடிய புள்ளி பெற்ற மாணவி செல்வி. அ. ஜோசற்லெளறா (அமரர் திருமதி நவரத்தினம் நினைவாக வழங்குபவர் - திரு.



# "மகுடம்"

## சஞ்சிகை

இதழ் – 01

# மாசடைந்த உலகம்

அழகிய பறவையின் உடலில் இருந்து
மெல்ல விலகி காற்றில் பறந்தது
ஓர் ஒற்றை இறகு.

பறவை நினைத்தது இறகு
தனிமையாக்கப்பட்டு நிர்க்கதியாய்
அலைந்து செல்கிறது என்று.

இறகு நினைத்தது நான்
சுகந்திர உலகில் சுவீட்சத்தை
அனுபவிக்கப் போகின்றேன் - என்று

சுகந்திரம் என எண்ணி - சுகமாக
காற்றில் மிதந்த இறகு
சேர்ந்த இடம் மாசடைந்த உலகம்

முகம் சுளித்தது இறகு
தூரத்தே தொழிற்சாலைக் கழிவு
காற்றெங்கும் வாகனப் புகை

திரு. பா. தபோதரன்
ஆசிரியர்

ஒரு சூறைக்காற்று அடித்தது
சுடுகாட்டுக் கடற்கரையில்
சுற்றி விழுந்தது இறகு.

அப்பாவி உயிர்களின் ஆயுள் ரேகை
அழிந்து உயிர் துறந்த உடல்கள்
பல்லாயிரம் சாம்பலாகிப் போன மாயம்.

தலை சுற்றி மயங்கியது இறகு
சுய நினைவு பெற்று எழுந்த போது
உணர்ந்தது அழிவின் பாதை
மனிதனே தன் அழிவுக்கு - வகுத்த
விதியே சூழல் மாசு

# இயற்கையும் நாமும்

காலையில் பூபாளம்
காற்றோடு கலந்திட
கண்விழித்து ஒரு தரம்
கள்ளமற்று நோக்கம்மா

கல்தோன்றி மண்தோன்றி
படிப்படியாய் நீ தோன்றி
உன் பின்னே தொடர
தோன்றிய மானிடமும்
நாம் அல்லோ!

மண்ணில் கால்மிதித்து
பரதம் ஆடிய போதும் - பூமித்தாயே
உனை வணங்க மறந்ததில்லை
விண்ணைத் தொடச் சென்ற போதும்
உன் பாதம் பணிந்து
செல்ல மறக்கவில்லை.

ஆனபோதும் நீ சீற்றம்
கொள்வது ஏன்? ஓ சற்றுப் பொறு
புரிகிறது இன்று மானுடம்
உன் மீது எல்லை தாண்டி
சீண்டி விட்டதா?

மனிதர் உள்ளம் எல்லாம்
இன்று ஒரே எண்ணமாகும்
அந்த எண்ணம் ............
உனக்கு எதிராக இருக்கிறது.

இயற்கை அன்னையே
நீ அறியாதவள் அல்ல
ஆகவே தான் மழையாக
முலைச் சரிவாக
சீற்றம் கொள்கிறாயோ ......!

மானுடா ..... புரிந்து கொள்
காற்று உன் பக்கம்
வீசினால் தான்
நதியில் உன் படகுகள்
நளினமாகச் செல்ல முடியும்.

செல்வி ப. கிரிஜா
ஆசிரியர்

## வாசகங்கள்

- அலட்டி அரட்டை அடிப்பதை விட
  புரட்டிப் புத்தகம் படிப்பதே மேல்.
- நல்ல புத்தகங்கள் இல்லாத வீடும்
  யன்னல் இல்லாத வீடும் ஒன்றே.
- உன்னைத் திருத்த உன் மூளையை உபயோகி
  பிறரைத் திருத்த உன் இதயத்தை பயன்படுத்து.
- வித்தகர் விளைவது புத்தக வயலில்
  புத்தகம் விளைவது வித்தகர் வயலில்.
- படிக்க நேரத்தை எடுத்துக்கொள்
  அது அறிவின் வாயில்.
- கல்வியை காய் என்று வீசாதே
  காயும் கனிந்தால் இனிக்கும்.
- இன்றைய கல்வியே - நாளைய
  நிலை பெற்ற செல்வம்.

- தலை குனிந்து படிப்பதெல்லாம்
  தலை நிமிர்ந்து வாழ்வதற்கே.

- மகிழ்ச்சியான கற்றலே
  மகிமையானது

**செல்வன் சி. சிவநாத்**
தரம் - 5

## நம் முதுசங்கள்

அனுபவம் நிறைந்த முதியோர்
நன்மை தீமை தெரிவித்து
நல் வாழ்வு காட்டும்
நம் முதுசங்கள்.

அன்பின் பிடிக்குள் அரவணைத்து
பண்பை சொல்லித் தரும் பெருந்தகைகள்
அமைதியும் ஆரோக்கியமும்
அழிவில்லாத வாழ்வும்
ஆசை ஆசையாய் எமக்கு
கற்றுத்தரும் முதியோர்.

தள்ளாத வேளையிலும்
தன்னம்பிக்கையூட்டி
எமை வளர்க்கும் மூத்தோரை
கண்போல் போற்றுவோம்.

ஒரு கூட்டுப்பறவையாய்
கூடியிருப்போம்
குதூகல வாழ்வை
என்றும் போற்றுவோம்.

**திருமதி ரே. குமாரதாசன்**
ஆசிரியர்

# சிந்தனைக்கு

**பெற்றோர்கள்**

பாடசாலையின் முக்கியத்துவத்தை இப்போதுதான் உணர்ந்தோம். ஆகவே எமது பிள்ளைகளை தவறாது தினமும் பாடசாலைக்கு அனுப்புவோம்.

**மாணவர்கள்**

எம் முன்னோர்கள் பாடசாலைக்குச் செல்லாது படும் கஷ்டங்களை உணர்ந்து நாம் பாடசாலையின் மூலம் கிடைக்கும் அனைத்து நன்மைகளையும் அனுபவிப்போம்.

**ஆசிரியர்கள்**

நாம் பிள்ளைகளை அறிந்து அவர்களுக்கு ஏற்ற வகையில் கல்வியை வழங்கி அவர்களைச் சமூகத்திற்கும் நாட்டிற்கும் ஏற்ற வகையில் நற்பிரஜையாக மாற்றுவோம்.

**திருமதி ச. தர்மலிங்கம்**
ஆசிரியர்

## அன்புடன்...

அம்மா காலை வீட்டிலே
ஆக்கித் தந்தார் பாற்சோறு
அள்ளி அள்ளிச் சாப்பிட
ஆகா ஆகா என்ன ருசி

பாட்டி அம்மா வீட்டிலே
பகலுணவு சோறு, கறி
பாப்பா தண்ணீர் என்கின்றாள்
ஐயோ ஐயோ கறி உறைப்பு

இன்று இரவு வீட்டிலே
இடியப்பம் தான் எமதுணவு
ஒன்று கூடி வாருங்கள்
ஓகோ ஓகோ சாப்பிடலாம்.

**செல்வன் சி. அபினாஸ்**
தரம் - 1

## வண்ணத்துப் பூச்சி

வண்ண வண்ணப் பூச்சியாம்
வண்ணத்துப் பூச்சியாம்

பல வர்ண நிறங்கள் கொண்ட
வண்ணத்துப் பூச்சியாம்

அழகு மிக்க பூச்சியாம்
அசைந்து செல்லும் பூச்சியாம்

பூவின் மீது தேனினை
உறிஞ்சிக் குடிக்கும் பூச்சியாம்

சந்தோஷமாய் இற கடித்து
பறக்கும் வண்ணத்துப் பூச்சியாம்.

**செல்வன் எ. போல் நியூலியன்**
தரம் - 1

## பூக்கள்

வண்ண வண்ண பூக்களே
வகை வகையான பூக்களே
கதை பேசிடும் பூக்களே
பல்வகை நிறப் பூக்களே

மழையோடு விளையாடும் பூக்களே
மண்ணோடு மணம் வீசிடும் பூக்களே
சிறுவர் எங்கள் மனங்கொள்ளும் பூக்களே
சிரித்திடும் அழகிய பூக்களே.

**செல்வன் அ. பிரட்றிக்ஜோய்**
தரம் -2

## எனது தாய் நாடு

அழகு நிறை மணித் திருநாடாம்
"இலங்கை"
சங்கீதம் பாடும் அலைப் பிள்ளைகள் சூழ்
இந்து சமுத்திரத்தின் நித்திலமானதும்
என் தாய் நாடு.

## வானம்

நீண்ட நீலச் சோலை உடுத்திடும்
**தேவதை நீ**
நிலவு தூங்கிடும் பஞ்சு மெத்தை நீ
சட்சத்திரங்கள் பூத்திடும்
நந்தவனமும் நீ.

**செல்வன். சி. றோகித்**
தரம் -1

## விடுகதை

1) உருவத்தில் சிறியவர் உழைப்பில் பெரியவன் அவன் யார்?
எறும்பு
2) மூடிய குகைக்குள் செம்பவள முத்துக்கள் அது என்ன?
மாதுளம்பழம்
3) இதயம் போல துடிக்கும் இரவு பகல் விழித்திருக்கும் அது என்ன?
கடிகாரம்

4) ஒருவனை அழைத்தால் ஊரையே கூட்டுவான் அவன் யார்?

காகம்

5) தரையிலும் கிடப்பான் சுவரிலும் நடப்பான் அவன் யார்?

பல்லி

6) தாவிப்போகின்ற தம்பிக்கு முதுகிலே மூன்று கோடுகள் அவன் யார்?

அணில்

7) வருடத்தின் ஆரம்பத்தில் வரும் விருந்தாளி வருடம் முழுவதும் வீட்டில் தங்குவான் அவன் யார்?

நாட்காட்டி

8) முத்து வீட்டிற் குள்ளே தட்டுப்பலகை அது என்ன?

நாக்கு

9) தண்ணீர் குடித்தாலும் இவன் வயிறு நிரம்பாது அவன் யார்?

கடல்

10) மெல்ல எழுந்து அடியெடுத்து வைத்ததும் தரை அதிரும் அது என்ன?

யானை

11) ஊசி போல இருப்பான் ஊரையே எரிப்பான் அவன் யார்?

தீக்குச்சி

12) என்னைப் பார்த்தால் உன்னைக் காட்டுவேன் நான் யார்?

கண்ணாடி

**செல்வி அ. அன்ரனிநிருஜா**
தரம் -4

## தெரிந்து கொள்ளுங்கள்

- ஒட்டகத்திற்கு நீந்தத் தெரியாது.
- நாய்க்கு மோப்ப சக்தி அதிகம் உண்டு.
- நண்டுக்கு அதன் வயிற்றிலே பற்கள் உண்டு.
- முதலைகள் உறங்கும் போது கண்களை மூடாது.
- உலகிலுள்ள பெரிய பிராணி நீலத்திமிங்கலம்.

**செல்வன். செ. தாரணிகன்**
தரம் -2

## ஏன்? இப்படி?

பட்டினி கிடந்து பள்ளியில் சேர்ந்தேன்
கல் மண் தூக்கி கல்லூரியில் சேர்ந்தேன்
வெய்யிலில் வெந்து வேலையில் சேர்ந்தேன்
மகளே! நீயோ எளிதில் என்னை
முதியோர் இல்லத்தில் சேர்த்தாய்.

**செல்வன். ஜோ. கன்யூட்**
தரம் - 3

## முதியோரை மதிப்போம்

- முதியோரே எமது நாட்டின் விலைமதிப்புள்ள பொக்கிசங்கள்.
- இவர்கள் எமது கண் போன்றவர்கள்.
- இவர்கள் நலனில் நாம் எப்போதும் அக்கறையுடன் இருக்க வேண்டும்.
- நோய் வந்த காலத்தில் அன்பாய் பேணிப் பாராமரிப்பது எமது கடமையாகும்.
- இவர்களை முதியோர் இல்லங்களுக்கு அனுப்பாது அவர்களது உள்ளம் நோகாமல் நடப்பது எமது பொறுப்பாகும்.
- இவர்கள் தான் எமது நாட்டின் முதிர்ந்த விருட்சங்களாகும்.

**செல்வன். அ. றோஜாமிஸ்ரிக்கா**
தரம் - 3

## நீரைப் பாதுகாக்கும் வழிமுறைகள்

- நீர் விரயத்தினையும், முறையற்ற பயன்பாட்டினையும் தடுத்தல்.
- சிக்கனமான விதத்தில் நீர்பாவனையைக் கைக் கொள்ளல்.
- குடி நீர் மாசடைவதைத் தடுத்தல்.
- காடுகளை அழிவிலிருந்து பாதுகாத்தல் மற்றும் மரங்கள் நடுவதை ஊக்குவித்தல்.

- நீர் வளத்தினைப் பாதுகாத்து அது மாசடைவதைத் தவிர்த்தல்.
- நீரைப் பாதுகாத்தலின் முக்கியத்தும் பற்றி மக்களுக்கு அறிவித்தல்.
- வீட்டுப் பாவனையின் போது கழிவு நீரை வேறு தேவைகளுக்கு பயன்படுத்தல்.
- ஆறு,குளங்களில் குளித்தல் உடுப்புக் கழுவுதல் போன்ற செயற்பாடுகளைத் தவிர்த்தல்.
- கிணற்றை பாதுகாப்பான முறையில் மூடுதல்.

**செல்வன். இ. சாத்ராக்**
தரம் - 4

## உலகின் முதன்முதலாய்

- உலகின் முதன் முதலாக அஞ்சல் தலை வெளியிட்ட நாடு இங்கிலாந்து.
- உலகை முதன் முதலாக சுற்றி வந்த கப்பல் விக்டோரியா.
- உலகின் முதன் முதலாக பத்திரிகைகளில் கார்ட்டூன் படங்களை வெளியிட்ட நாடு இத்தாலி.
- உலகில் முதன் முதலாக கண் வங்கியை தொடங்கிய நாடு அமெரிக்கா.
- உலகில் முதன் முதலாக அஞ்கல் தலையில் கழுதை படத்தை வெளியிட்ட நாடு கென்யா.
- உலகின் முதன் முதலாக 1403இல் சிறைச்சாலை ஏற்படுத்திய நாடு இங்கிலாந்து.
- உலகின் முதன் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை 1848இல் தந்தை சேர்கென்றிகோலி என்வரால் உருவாக்கப்பட்டது.
- உலகின் முதன் டெலிபோன் டைரக்கறி 1800ஆம் ஆண்டு லண்டனில் வெளியிடப்பட்டது.
- உலகின் முதன் முதலாக சங்கீதம் தொடர்பாக வெளிவந்த நூல் நயசாஸ்திரா.

**செல்வி வ. டிலைக்சனா**
தரம் - 5

## பொது அறிவு

1. உலகிலேயே மிகவும் பரந்த கடல் எது?
   தென்சீனக்கடல்
2. உலகிலே பெரிய ஏரி எது?
   கஸ்பியன் (ரஷ்யா - ஈரான்)
3. உலகிலேயே மிக உயரமான நீர் வீழ்ச்சி எது?
   ஏஞ்சல்ஸ் (வெனிசுவெலா) 979 மீற்றர்
4. உலகிலேயே அதிக மக்கள் தொகையுள்ள நாடு எது?
   சீனா
5. உலகிலேயே குறைந்த மக்கள் தொகையுள்ள நாடு எது?
   வத்திக்கான்
6. உலகிலேயே நீளமான (ரயில்வே) நடைபாதை எங்குள்ளது?
   காரக்புர்
7. உலகிலேயே மிக ஆழமான ஏரி எது?
   பைக்கால் ஏரி
8. உலகிலேயே மிக நீளமான குகை எது?
   மாமத் குகை
9. உலகிலேயே உள்ள ஒரே ஒரு இந்து மத நாடு எது?
   நேபாளம்

**செல்வி அ. ஜோசற்லைஹா**
தரம் - 5

## நம்பினால் நம்புங்கள்

- ஒரு அமெரிக்கர் சாராசரியாக ஆண்டுக்கு 120 அப்பிள் சாப்பிடுகிறார்.
- நடந்தாலும், ஓட்டப்பயிற்சி செய்தாலும் கிலோ மீற்றருக்கு 60 கலோரியே செலவாகும்.
- கடலின் சராசரி ஆழம் 4.3 கிலோ மீற்றர்.
- ஈபிள் கோபுரம் கோடை காலத்தில் வெப்பத்தால் 15 செ.மீ உயர்கிறது.
- ஆண்களை விட பெண்கள் இரு மடங்கு கண்சிமிட்டுகிறார்கள்.

- நமது இதயம் தினமும் ஒரு லட்சத்திற்கும் அதிகமான முறை துடிக்கிறது.
- தூங்கும் போது தும்மல் ஏற்படுவதில்லை.
- ஆமைகள் பின்பக்கதுளை வழியாக சுவாசிக்கின்றன.
- சீனாவில் மற்ற நாடுகளை விட பன்றிகளின் இனப் பெருக்கம் அதிகம்.
- உலகில் விற்பனையாகும் ஐஸ்கிறீம்களில் மூன்றில் ஒரு பங்கு வனிலாவே!

**செல்வி. எ. திவ்வியா**
தரம் - 5

## பிற மரபுப் பெயர்கள்

ஆடு மேய்ப்பவன் - இடையன்
வாகனம் ஓட்டுபவன் - சாரதி
மீன் பிடிப்பவன் - மீனவன்/செம்படவன்
தேர் ஓட்டுபவன் - பாகன்
கப்பல் ஓட்டுபவன் - மீகாமன்/மாலுமி
வீண் டிசலவு செய்பவன் - ஊதாரி
சிலை வடிப்பவன் - சிற்பி
கவிதை எழுதுபவன் - கவிஞன்

**செல்வி. வா. வைஸ்ணவி**
தரம் - 5

# My Self

I am S. Kapilas
I am a Boy
I am in grade five
I live in Chunnakam
I like ice-Cream

I study at Chunnakam R.C.T.M. School
My father's name is Sinnarajah
My home address is Kandarodai
My favorite subject is Tamil

**Mas. S. Kapilas**
Grade - 05

## விசேட தேவையுள்ள மாணவர்களின் சமூக மயமாக்கலில் பாடசாலைகளின் வகிபங்கு

விசேட தேவை பிள்ளைகள் என்பது சாதாரண நிலையில் கற்றல் குறைபாடு விடயங்களாக அல்லது தீவிர புத்தி சுவாதீனம் உடையவர்களாக இருக்கக் காணப்படலாம். அதே போன்று கொள்ளை நோய் விருத்திக் குறைபாடு, தீவிரமான உள ரீதியான பிரச்சினைகள் போன்றன காணப்படலாம். விசேட தேவை கொண்ட மாணவர்களின் வகுப்பறையினுள் ஊனமுற்ற அதீத திறன்களைக் கொண்ட மாணவர்கள் ஏனைய மாணவர்களிடமிருந்து வித்தியாச மாகத் தென்படமாட்டார்கள். ஆனால் அவர்களது கற்றல் தேவைகள் பெரிதும் வேறுபட்டவையும், பிரச்சினைக்குரியவை யாகவே இருக்கும். ஏனைய மாணவர்களைப்போல இவர்களும் ஆசிரியர்களுக்கு ஒரு அறைகூவலாக இருப்பார்கள். பாட சாலையில் கற்பதன் காரணமாகவும் அனுபவங்களைப் பெறுவதன் காரணமாகவும் கற்றல் மாற்றங்களினால் இவர்களின் நிலையை மாற்ற முடியும்.

விசேட தேவையுடைய பிள்ளைகளின் சமூகமயமாக்கல் சமூகமயமாக்கல் முகவர்களில் பாடசாலைகள் பெரும்பங்கினை செல்வாக்கு செலுத்துகின்றன. பாடசாலைகளில் கல்வி முறை சார்ந்த வகையில் வழங்கப்படுகிறது. வயது நாட்டங்கள் சில வேளைகளில் பால் என்பவற்றின் அடிப்படையில் பாடசாலையில் மாணவர்கள் குழுத் தொகுதிகளாக்கப்பட்டு மாணவர்கள் உள் வாங்கப்படுகின்றனர். சாதாரண பிள்ளைகளோடு விசேட தேவையுடைய பிள்ளைகளையும் சேர்த்தல் என்பது

ஒன்றிணைத்தல் அல்லது உள்ளடங்கற் கல்வி என அழைக்கப் படுகிறது. புலன், விவேகம், மனவெழுச்சி மற்றும் உடலியல்சார் குறைபாடுகள் உள்ள ஒத்த வயதுப் பிள்ளைகளை ஒரே வகுப்பில் கற்கும் நடைமுறையை சாதாரண பிள்ளைகளோடு சேர்த்தல் என்பர் அதே வேளை விசேட வகுப்புக்களில் கற்றுக் கொண்டிருக்கும் இயலாமையுடைய பிள்ளைகளை குறிப்பிட்ட ஒரு காலத்தின் பின்னர் வழமையான வகுப்புக்களில் சேர்த்தலும் Main Streaming ஆகும். (Emznvel Son, 1998)

கல்வியானது பொருளாதார போட்டியின் ஒரு கருவியாகக் கருதப்படுவதால் குறைபாடுகள் உள்ள பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளைப் போன்று ஒரே கலைத்திட்டத்தை கற்றுக் கொள்ள வேண்டுமென்ற கருத்தினை உள்ளடக்கற் கல்வி வலியுறுத்து கின்றது.

எனவே சாதாரண பிள்ளைகளோடு சேர்த்தல் என்பது இயலாமையுடைய பிள்ளைகளுக்கு சமுதாயத்திலுள்ள ஏனைய பிள்ளைகளைப் போன்று ஒரே விதமான அனுபவங்களை பெற்றுக் கொள்வதற்கான உரிமையை வலியுறுத்துகின்றது. அதே வேளை வகுப்பறையில் கற்பித்தல் உபாயங்கள் இயலாமையுடைய பிள்ளைகளுக் கேற்றவாறு அதாவது வகுப்பறையின் பல்வகை மைத் தன்மைக் கேற்றவாறு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். மேலும் பாடசாலைகளில் சாதாரண பிள்ளைகளோடு சேர்த்தல் மூலம் இயலாமையுடைய பிள்ளைகளுக்கேற்றவாறான கற்றல் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

உதாரணமாக ஐக்கிய அமெரிக்க நாடுகளிலுள்ள இரண்டு சட்டங்கள் எந்தவெரு மாணவனும் விடுபடக் கூடாது. (No child Left Behind NCLB) இயலாமையைக் கொண்ட தனிநபர் கல்விச் சட்டம் (Individual Disparities Education Act). பற்றி Eliot (2003) குறிப்பிடு கின்றார். அதாவது விசேட தேவையுடைய பிள்ளைகள் சார்பாக பெற்றோர் முடிவு எடுக்கவும் அனுபவத்தை அடிப்படையாகக்

கொண்டு கற்பித்தல் முறைகள் பயன்படுத்தப்படவும் இவ்விரண்டு சட்டங்களும் இடம் அளிக்கின்றன. பொதுக் கல்வியிலாளர் களுக்கும் விசேட கல்வியாளர்களுக்கும் இடையே இருக்கின்ற இடைவெளியை இச் சட்டங்கள் குறிப்பிடுகின்றார். என Eliot குறிப்பிடுகின்றார். மையக் கலைத்திட்டத்தை கற்றுக் கொள்ளல் கற்றலுக்கான சந்தர்ப்பம், ஆய்வு அடிப்படையிலான கற்பித்தல் முறை தர அடிப்படையிலான தீர்மானம் எடுத்தல் போன்ற விடயங்களை இச் சட்டம் கவனத்தில் கொள்கிறது.

எனவே மேற்கூறிய விடயங்களை கருத்தில் கொண்டு விசேட தேவைகளை உடைய பிள்ளைகளின் சமூக மயமாக்கல் செயன்முறையை மேம்படுத்த முடியும். கல்வி சார் செயற்பாடுகள், கல்வி சாரா இணைபாட விதான செயற்பாடுகள் போன்றவற்றில் சாதாரண பிள்ளைகளோடு மற்றொரு பிள்ளை இணைந்து கொள்ளாமைக்குரிய காரணம் நியாயப்படுத்தப்படல் வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள் பாடசாலைக் கலைத்திட்டங்கள், மன்றங்கள், விளையாட்டுக்கள் பாடசாலை விட்ட பின்னரான செயற்பாடுகள், மாணவர் செயற்பாடுகள், மாணவர் போக்குவரத்து போன்ற சகல விடயங்களையும் உள்ளடக்க வேண்டும்.

கற்றல் சந்தர்ப்பத்தின் போது ஆசிரியர் ஒருவருக்கு பிள்ளைகள் ஒவ்வொருவருடனும் தொடர்பு கொள்வதற்கு நேரம் மட்டுப்பட்டிருப்பதாலும் வளங்கள் மற்றும் ஒவ்வொரு மாணவரினதும் கற்றல் தேவைகளை கண்டு கொள்வதற்கான திறன்கள் போதாமையிருப்பதை இனங்கண்டு அவர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி வழங்கி சிறப்பாகத் தொழிற்பட தயார்ப்படுத்தல் ஆகும்.

உதாரணமாக ஒழுக்கத்தில் ஏற்படுகின்ற சில குறைகளை கவனி யாது விடல் தேவையான மாணவர்களிடம் கூடிய ஊடாட்டத்தை ஏற்படுத்திக் கொள்ளல், மாணவர்கள் தொடர்ந்தும்

பணிகளில் ஈடுபடக் கூடியவாறு பல்வேறு விதமான செயற் பாடுகளை வழங்கல் போன்றவையாகும்.

மாணவர்களை அவர்களுடைய ஆற்றலுக்கேற்ப வகைப்படுத்தி வெவ்வேறு தன்மை கொண்ட கற்றல் பணிகளை ஆசிரியர்கள் வழங்க முடியும்.

விசேட தேவையுடைய பிள்ளைகள் ஒரு வளர்ந்த வனுக்கான வாழ்க்கைக்கு மாறுவதற்கு பாடசாலைக்குச் செல்வது உடன்பாடான ஒரு விடயமாகவும் பெற்றோருடைய ஒரு ஈடுபாடு பாடசாலையை விட்டு விலகுவதற்கு முன்னரே தொழிற் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் சமுதாயத்தோடு ஒன்றி வாழு வதற்கான சில திறன்களை வளர்த்துக் கொள்ளும் வகையிலான கலைத்திட்டம், எவ்வித குறைபாடும் அற்ற ஒத்த வயதுக் குழுவினரும் இயலாமையுடையோர் இணைந்து வாழும் சந்தர்ப்பங்கள் என்பன விசேட தேவையுடையோருக்கு வாழ்க்கை முழுவதிலும் உதவும் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு இடைநிலைப் பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்கள் தொழிற் பயிற்சி திட்டங்களை உள்ளடக்கி மேம்படுத்தலாம்.

1998இல் கட்டாயக் கல்வி என்ற ரீதியில் கட்டாயக் கல்வி என குழு அமைத்து 5-16 வயது வரையில் கல்வி கற்க வேண்டும். பாடசாலைக்கு சமூகம் தர வேண்டும். அதன் மூலமும் விசேட தேவையுடைய பிள்ளைகளையும் சமூக மயமாக்கல் செயன் முறைக்காக பாடசாலையில் இணைக்கப்படலாம்.

ESDFPஇன் கீழ் அரசாங்கம் அபிவிருத்திப் பங்குதாரர் களிடம் இருந்து உதவிகளை அனைவருக்கும் கல்வி என்பதை நோக்கி நகர்த்தியது. நாட்டு நிகழ்ச்சித் திட்டங்களில் விசேடமாக அடிப்படைக் கல்வி, அனைவருக்கும் கல்வி, பிள்ளைகளின் உரிமைகள், பிள்ளைநேயப் பாடசாலைகள் போன்றவற்றுக்கு உதவியளிப்பதில் UNICEF இற்கு நீண்ட கால பாரம்பரியம் ஒன்று உண்டு. தரமான அடிப்படைக் கல்வி முழுமையான அணுகு

முறையினூடாக சமவாய்ப்பு பாடசாலை வசதிகளையும் கற்றல் கற்பித்தல் வளங்களையும் வாய்ப்புக்களையும் விருத்தி செய்வதன் மூலம் விசேட தேவைகளையுடைய பிள்ளைகளின் சமூகமயமாக்கல் செயன் முறையை மேம்படுத்தலாம்.

சாதாரண வகுப்பறையில் விசேட தேவையுடைய பிள்ளை களை உள்ளடக்குவதற்கு மேலதிகமாக தேர்ச்சி அடிப்படை யிலான கலைத்திட்டமும் தொடர் கணிப்பீடும் முன்பிருந்த தவணை இறுதி மற்றும் வருட இறுதிப் பரீட்சை முறைமையை விடச் சிறந்தது என இனம் காணப்பட்டுள்ளது. மேலும் கற்பவர் மையக்குழு மற்றும் வருட இறுதிப் பரீட்சை முறைமையைவிடச் சிறந்தது என இனம்காணப்பட்டள்ளது. மேலும் கற்பவர் மையக் குழு மற்றும் செயற்பாட்டு அடிப்படைக் கற்பித்தல், கற்றல் செயன்முறை மற்றும் தொழிநுட்பத் திறன்களின் விருத்தி, இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகள் மூலம் விசேட தேவையுடைய பிள்ளைகளை சமூகமயமாக்கல் செயன்முறையில் உள்வாங் கலாம்.

விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு கல்வி ஆலோசனைகளை வழங்குதல் செயற்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் மேம்பட்ட செயன்முறையை மேற் கொள்ளல். விசேட தோவைகளுடைய பிள்ளைகளை சமூகமயமாக்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முழுமையான தொழில் வாண்மைத்தகைமையை அடையக் கூடிய வகையில் எல்லா ஆசிரியர்களுக்குமான சேவை முன் பயிற்சியொன்றை உறுதிப்படுத்துவதன் மூலம் ஆசிரியர் கல்விக்கான தேசிய அதிகார சபையின் (NATE) நெறிப்படுத்தலின் கீழ் ஆசிரியர் கல்வியை மேம்படுத்தல் மூலம் செயற்படுத்தலாம்.

விசேட தேவையுடைய பிள்ளைகள் பாடசாலைகளில் சமூகமயமாக்கலில் ஈடுபட அவர்களின் இயல்புகளுக்கு ஏற்ப பௌதிக வளங்களை சீர்செய்து சிறப்புற வைத்திருக்க வேண்டும் இதன் மூலம் பாடசாலையில் பிள்ளை சமூகமயம்

ஆக்கலில் ஈடுபடுகின்றது.மேலும் வார்த்தைக் குடும்பங்களை உருவாக்கிக நிமிட நேரத்தில் பயிற்சியளிப்பர்.

உதாரணமாக மை இறுதி எழுத்தாக அமையும் சகல மூன்றெழுத்துச் சொற்களையும் தேடி எழுதுவார். சொல்லங்கியை உருவாக்குதல் அதாவது சொற்களை அட்டைகளில் எழுதி ஒரு பெட்டியில் இட்டு அடிக்கடி சொற்களை வாசிக்க செய்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்து மாணவருடன் சேர்ந்து மேற்கொள்ளு வதன் மூலம் அவர்களது நம்பிக்கையை கட்டி எழுப்புவதன் மூலம் மேம்படுத்தலாம்.

விசேட தேவையுடைய மாணவர்களை கூட்டுறவு முறை யிலான எழுத்து செயற்திட்டங்களை பாடசாலையில் ஏற்படுத்தல் அதாவது இவற்றில் மாணவர்கள் பின்வரும் வகிபங்குகளை ஏற்கலாம்.

- சிந்தனைக் கிளர்ச்சியாளர்
- எழுத்தாளர்
- தகவல்களை ஒழுங்குபடுத்துவர்
- படம் வரைதல்

போன்ற வகிபங்கை ஏற்று சமூகமயமாக்கலை மேம் படுத்தலாம் பொறுமையுடன் பாடசாலைகளில் செயற்பட்டு விசேட தேவையுடைய மாணவர்களை சமூகமயமாக்கல் சந்தர்ப்பத்தில் மேம்படுத்தலாம் அதாவது மாணவன் கற்க விரும்புகிறான். என்பதை மறக்கக் கூடாது.

உதாரணமாக தொடர்ந்து கணித பாடத்தில் தோல் வியைத் தழுவுகின்ற காரணத்தினால் மாணவன் இப் பாடத்தில் தீவிர மனவெழுச்சிசார் பிரச்சனைகளை எதிர் கொள்கிறான். ஒருசிறு விளக்கமின்மையால் மாணவன் பாரிய மனவெழுச்சித் தாக்கத்திற்கு ஆளாகிறான். அவனுக்காக பரிதாபப்படுவதினால் எதுவும் நடைபெறப் போவதில்லை ஆனால் பொறுமைகாத்து

அவனுக்கு தனிப்பட்ட ரீதியில் உதவுவதால் பயன் ஏற்படும் பலவீனமான திறன்களை விருத்தி செய்யக் கூடிய வகையில் திருத்தமான உடற் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தினை வழங்கிக் குழுவாக ஒருங்கிணைப்புடன் செயற்படும் போது விசேட தேவையுடைய பிள்ளைகளினை சமூகமயமாக்கி மேம்படுத்தலாம். மேலும் குழு வேளையின் போது சிரமப்படும் பிள்ளைகளை உதவி செய்ய விரும்பும் பிள்ளைகளுடன் சேர்த்து வைத்து பாடசாலைகளில் செயற்பட வைத்தல் மூலம் விசேட தேவை யுடைய பிள்ளைகளை மேம்படுத்தலாம்.

விசேட தேவையுடைய பிள்ளைகளை சமூகத்திற்கு எதிரான இடையூறு ஏற்படுத்தக் கூடிய நடத்தைகளைக் குறைத்தல் சமூகத்திற்கு ஏற்ற நடத்தைகளை மேம்படுத்தல் அதாவது ஏற்கப்பட முடியாத நடத்தை என்பதை மாணவர்கள் அறியச் செய்யும் சைகைகளை விருத்தி செய்தல் வகுப்பறையில் பாடசாலையில் மாணவர் நடத்தை தொடர்பான எல்லைகளை மாணவர்களுக்கு நேரத்துடன் அறிவித்தல் போன்ற செயற்பாடுகளை மேற் கொண்டு மேம்படுத்தல் இவர்களுக்கு தொடுகை இயக்கம் மூலம் கற்பிப்பது சிறந்தது.

உதாரணமாக சப்பாத்து அணிவதற்கு கற்பிக்கும் போது பிள்ளையின் கையை ஆசிரியர் பிடித்து பிள்ளையின் பாதங்களை தொட்டு உணரச் செய்வதன் மூலம் பிள்ளை தனது பாதத்தின் வடிவத்தை தெரிந்து கொள்ளும் அடுத்து சப்பாத்தின் உள்ளும் புறமும் தொட்டுணரப்பட வேண்டும். அதன் பின் சப்பாத்து அணிவிக்கப்பட வேண்டும். இதன் மூலம் சப்பாத்து அணியும் முழுப் பணியும் பிள்ளை தெரிந்த கொள்ளும் இலகுவாக மேம்படுத்தலாம். மேலும் கற்பவர் மையக் குழு மற்றும் வருட இறுதி பரீட்சை முறைமையை விடச் சிறந்தது என இனம் காணப்பட்டுள்ளது. மேலும் கற்பவர் மையக் குழு மற்றும் தொழிநுட்பத் திறன்களின் விருத்தி இணைக் கலைத்திட்ட செயற்பாடுகள் மூலம் விசேட தேவையுடைய பிள்ளைகள் சமூகமயமாக்கல் செயன் முறையில் மேம்படுத்தலாம்.

பாடசாலையில் விசேட தேவையுடைய மாணவர்களிற்கு வகுப்பறைச் செயற்பாடுகளில் சிற்சில மாற்றங்களை ஏற்படுத்த லாம். நகரும் பிரச்சினைகள் உள்ள மாணவர்களை வகுப்பு முடிவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் நேரத்துடன் செல்ல அனுமதித்தல். இதன் மூலம் அவர்கள் அடுத்த வகுப்புக்களுக்கு நேரத்துடன் செல்லமுடியும். பாடசாலையிலிருக்கும் போது மருந்து உட்கொள்ள வேண்டிய மாணவர்களுக்கு அதற்கான வசதி யினையும் நேரத்தினையும் ஒதுக்கிக் கொடுத்தல். அடுத்து உடற்கல்வி செயற்பாடுகளில் இவர்கள் முழுமையாக ஈடுபட முடியாத காரணத்தினால் விசேட உடற்கல்வி செயற்பாடுகளை அறிமுகம் செய்தல். மேலும் இலகுவாக நகரக்கூடிய வகையில் வகுப்பறையை ஒழுங்குபடுத்தியும், ஆசன வசதிகளை கவனித்தும் கழிவறைகள், ஓரப்பாதைகள், படிகட்டுகளுக்கான மாற்றுப் பாதை போன்றவற்றை சரியாக அமைத்துச் செயற்படுத்துவதன் மூலம் சமூகமயமாக்கலை மேம்படுத்தலாம்.

எனவே மேற்கூறிய அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு விசேட தேவையுடைய மாணவர்களின் சமூகமயமாக் கலில் பாடசாலைகள் செயற்பட்டு மேம்படுத்தலாம்.

**பா. சதீஸ்குமார்**
**அதிபர்**

# சிந்தனைக்கு சில...

| | | |
|---|---|---|
| மிகவும் நல்ல நாள் | - | இன்று |
| மிகப் பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| மிகவும் பெரிய தேவை | - | சமஜோசிதபுத்தி |
| மிகவும் சுலபமானது | - | குற்றம் காணல் |
| மிகவும் பெரிய நோய் | - | பேராசை |
| நம்பக் கூடாதது | - | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | - | அதிக பேச்சு |
| செய்ய வேண்டியது | - | உதவிகள் |
| செய்யக் கூடாதது | - | தவறுகள் |
| உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| நழுவவிடக் கூடாதது | - | வாய்ப்பு |
| வந்தால் போகாதது | - | புகழ், பழி |
| போனால் வராதது | - | மானம், உயிர் |
| வருவதும் போவதும் | - | இன்பமும், துன்பமும் |
| தானாக வருவது | - | இளமை, முதுமை |
| அடக்க முடியாதது | - | ஆசை, துக்கம் |
| தவிர்க்க முடியாதது | - | பசி, தாகம் |
| அழிவைத் தருவது | - | பொறாமை, கோபம் |
| எல்லோருக்கும் சமமானது | - | பிறப்பு, இறப்பு |
| கடைத்தேற வழி | - | உண்மையும், உழைப்பும் |
| நம்முடன் வருவது | - | பாவம், புண்ணியம் |
| வணக்கத்திற்குரியவர்கள் | - | தாயும் தந்தையும் |
| பிறர் தர வராது | - | நன்மை, தீமை |
| ஆண்டவன் கொடை | - | நல்லகுரு |

திருமதி க. உதயகுமாரன்
ஆசிரியர்

## எமக்கு உதவும் கரங்கள்

01. திரு. அ. கிருபாகரன் (கிருபா லோணர்ஸ்) - ரூபா 30000.00
02. திரு. S. சந்திரநாதன் - 5000/- ரூபா பெறுமதியான வெற்றிக்கிண்ணங்கள்
03. வருத்தப்படாத வாலிபர் சங்கம் - விளையாட்டு உப கரணங்கள்
04. பெற்றோர்கள் (9பேர்) ஒலிபெருக்கி, பந்தல்
05. பனை தென்னை அபிவிருத்திச் சங்கம் - 1000/- பெறுமதி யான வெற்றிக் கேடயங்கள்
06. திருமதி க. சின்னராசா
07. திரு. S. ஜெராட்
08. திரு. சி. சுகந்திரன்

(06–08) ஒருநாள் இலவச மதிய உணவு

09. திருமதி க. எயுயீன் மசனட் - பாற்கஞ்சி (நாட்கள்)
10. அவுஸ்திரேலியா றோட்டறிக் கழகம் - தரம் 3 மாணவன் சிவகுமாரன் சிவஸ்ரீன் செயற்கைக் கை பொருத்துதுதல்.
11. திரு. உ. பரராஜசேகரம் - 34 மாணவர்கள் இலவச சீருடைகள்
12. திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களின் சிபார்சில் வடக்கு மாகாணசபை நிதி ஒதுக்கீட்டில் ரூபா 100000/ சமையலறை அமைத்தல்.
13. திருமதி ம. மரியதாஸ் - ஒருநாள் இலவச மதிய உணவு
14. திருமதி உமாபதிசிவம் நினைவாக வழங்குபவர் திரு. உ. பரராஜசேகரம் - உணவு
15. வலிகாம கல்வி வலயம் - சமையலறை, வகுப்பறை தீந்தை பூசுதல், யன்னல்களுக்கு கண்ணாடி பொருத்தல்.
16. திருமதி க. உதயகுமாரன் - இலங்கையின் மாகாணங்கள், மாவட்டங்களின் வரைபடம்
17. பெற்றோர் திரு. இ. எயுயீன் மசனட் சார்பில் நலன்விரும்பிகள் 11 பேர் 2 நாட்கள் சிரமதானம்.

18. வைத்திய அதிகாரி ஜெயக்குமாரன் - சமையலாளர் களுக்கான கொடுப்பனவு 2015ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் தொடக்கம் தலா 3000/-

19. புலமைப்பரிசில் ஞாபகார்த்தப் பரிசு 1000/- வழங்குபவர் திரு. ந. விக்கினேஸ்வரன்.

20. அமரர் வைத்தியகலாநிதி கபிரியேல் ஜோர்ஜ் நினைவாக ஜோர்ஜ் ஆஞ்சலோ ஞானேஸ்வரன் - அழைப்பிதழ், பரிசுப் பொருட்கள், சிற்றுண்டிகள், ஒலியமைப்பு, மேடை அலங்காரம்.

21. சிவஸ்ரீ. நா. சர்வேஸ்வரக் குருக்கள் - மண்டபம், கதிரைகள், மேடை, மின்சாரம்

22. அமரர். பாவிலு அமிர்தநாதன் நினைவாக வழங்குபவர் அமிர்த நிதியம் - 10000/- (மகுடம் சஞ்சிகை வெளி யீட்டிற்கு)

23. தொண்டர்ஆசிரியர் கொடுப்பனவு
    - திரு. பா. தபோதரன்
    - (தரம் 4 மாணவர்களின் பெற்றோர்கள்)
    - (செல்வி மேரிநித்தியா - யாழ் எயிட் 2015 புரட்டாதி மாதம் முதல்)
    - செல்வி ப. கிரிஜா - திருமதி க. உதயகுமாரன்

24. நினைவுப்பரிசில்கள் - ஆசிரியர் கழகம்

25. பாடசாலை வளாகம் மண் நிரப்பல்

    (Regi and Regi Impex Pvt. Ltd) - 40000.00

    கிருபா லேனோர்ஸ் - 20000.00





